உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ௨௧.] ருதிரோற்காரி-௵ ஐப்பசி௴ [பகுதி ௧௨

Vol.-XXI. October-November-1923. No. 12.

குச்சரம்.

மணிமேகலையிற்றோன்றும் 'குச்சரக்குடிகை' என்றதொடர்மொழியின் பொருளை ஆராயக்கருதி 1919-ம் வருஷத்துச் 'செந்தமிழ்' 17-ம் தொகுதி 11-ம் பகுதியில் சிறியதோர்கட்டுரை நான் வெளியிட்டதில் அத்தொடரின் பொருள் 'கற்பாறையிற் குடைந்த சிற்றில்' என்றிருக்கக்கூடுமென்றேன். நற்றமிழ்க்குரவர் மகாமகோபாத்தியாயசாமிநாதையரவர்கள் இதற்கு 'கூர்ச்சரதேசத்துப்பணியமைந்த சிறியகோயில்' என்று பொருள் விளக்கியிருப்பது நான் நன்கறிந்திருந்தும், வேறு பொருள் கூறத்துணிந்ததற்கு சிலகாரணங்கள் வரைந்திருந்தேன். இப்பொழுது வெளிவந்த 'செந்தமிழ்' தொகுதி 21 பகுதி 10-ல் ஸ்ரீமத் கே. ஜீ. சங்கரையரவர்கள் என் கூற்றை மறுத்தெழுதியிருக்கிறார்கள். வடமொழிப் பதமாகிய குத்ரம் தமிழில் 'குத்தரம்' 'குச்சரம்' என்றாயிற்றென்று நான் எழுதியிருந்ததைக்கண்டித்து ஸ்ரீமத் சங்கரையரவர்கள்: "இது தவறென்பது தெளிவாம். வடமொழியில் குத்ரம் என்றிருப்பது குத்திரமென்றே தமிழிலாகும். குத்தரம் அல்ல: நிகண்டுகளிலும் குத்திரமென்றே காணப்படுகிறது. குத்திரம் குச்சரமாக மாறியிருப்பதற்கு வேறு சான்றொன்றுமில்லை." என்கிறார்கள். குத்ரம் குத்தரமாதல் இலக்கணமுறையாலிசையாதென்று துணிவுறக்கூறத்தகுமா?

வடமொழியாக்கத்தைப்பற்றிய நன்னூற்சூத்திரங்களுள் "இணைந்தியல்காலை' என்று தொடங்கும் சூத்திரம் இவ்வியவகாரத்திற்குப்

பொருந்தும். அச்சூத்திரத்தின் கடையில் நிற்கும் 'பிற' என்ற மிகையால், வடமொழியில் இரண்டெழுத்திணைந்தோரெழுத்தைப்போல நடக்கும்போது, அது தமிழில் வருங்கால் பின்நிற்கும் யாலக்கு இகாமும், மவக்கு உகரமும், நகரக்கு அகரமும், முன்நின்ற ரகரத்திற்கு உகரமும் யாண்டும் வரக்கடவன வென்றேற்படாது வேறு விதங்களிலுந்திரிந்து வருதல் இலக்கணமுறையேயாமென்பது விளங்குகின்றது. சக்ரம் என்ற வடமொழிப்பதம் தமிழில் சக்கரம் என்று வழங்கிவருதல் இங்கு கவனிக்கத்தக்கது உதாரணம்:—

"சக்கரநெறிநில்" ஔவை

"சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர், ரெக்காலுஞ் சொல்லார் மிருதிச்சொல்"—நாலடியார்

"சக்கரக்கை மன்னுயிர் முதல்வன்,"—மணிமேகலை.

"சக்கரக்கையன் தடங்கண்ணால் மலரவிழித்து"—பெரியாழ்வார்.

"சக்கரத்தண்ணலேயென்று:"—நம்மாழ்வார்

"சக்கர மாற் கீந்தானும்:"—ஞானசம்பந்தர்

"சக்கரந்தானவனுடவிற்றுக்குற:—கம்பராமாயணம்.

சூடாமணிநிகண்டும் சக்கரமென்றே கூறுகின்றது. 'சக்கரப்பேர் நேமி பரிதியே வலயமெஃகாம்'. "யாலக்கிகாமும்" என்றிருத்தலால் சக்கிர மென்றே யிருக்கவேண்டும். சக்கரம் பிழையேயாமென்று கூறலாமா? சக்கிரமென்றும் பிரயோகமிருத்தல் ஸ்ரீமத். பி. இராமநாதனது 'தமிழ்ப் பெயரகராதி'யை நோக்க நன்குவிளங்கும். "சக்கிரிகுயவன் செக்கான் றராபதிநெடுமால்பாம்பு" என்று சூடாமணிநிகண்டிலும் வருகின்றது. சக்கிரம் என்ற பிரயோகத்தைவிட்டு, சக்கரம் என்றெழுதினோர் பிழை படக் கூறினர்களென்று சொல்வதிசையாது. இதுபோலவே, வக்ரம் என்ற வார்யபதம் வக்கிரமென்று வரவேண்டும் 'வக்கிரங்கொடுமைமீளன் மடங்குதலுடனேவட்டம்' என்பது சூடாமணிநிகண்டு. ஆயினும், ஞானசம்பந்தர் 'வக்கரவாமையேனமருப்போடவைபூண்டழகார்' என்றார். மேலும், 'நகரக்ககரமும்' என்றதற்கு மாறுபாடாக, 'ஈங்கிதனயலகத்தி ரத்தினத்தீவத்து' என்று மணிமேகலை வாக்கியத்தில் ரத்நம் இரத்தின மாக மாறியது. இதுவும் வழுவாகுமா? இவைபோன்ற பிரயோகங்கள் பிழையாகமாட்டாவாயின், சுத்ரம் சூத்திரமாதல் ஏன் தப்பாகவேண்டும்?

குத்தரமாகுமானல், தகரம் சகரமாகத் திரிந்து குச்சரமாதல் மரபே யாம். நிற்க, கூர்ஜா குச்சரவாயிற்றென்று சொல்லுமிடத்தும், 'மிசை வரும் ரவ்வழியுவ்வும்' என்ற விதிக்கு விபரீதமாகத் திரிந்துவந்த தென்றே கூறவேண்டும்.

பின்னர், கூர்ஜரர் சிறந்த சிற்பியரென்றும், அவர் நூதனவிதப் பணியேற்படுத்தினரென்றும், அவர், தென்சார்கடந்தேகினரென்றும் நானறிந்தமட்டிலும் சரித்திர நூல்களில் காணவில்லை. ஆனல் ஸ்ரீமத் சங்கரையர் Encyclopædia Britanica வில் Indian Architecture என்ற வியாசத்தால் கூர்ஜரதேசம் சிற்பத்தில் பெயர்பெற்றிருப்பதை அறியலாமென்கிறார். நான் அப்புத்தகத்தில் அந்தப்பாகத்தைக் கவனமாய் வாசித்துப்பார்த்தேன் (11th Edition , Vol. 14 p. 431). கூர்ஜாதேசம் சிற்பத்திற் சிறந்ததென்று அங்கு சொல்லியிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. 12-ம் நூற்றாண்டிற்குமுன் குஜராத்தில் பல சிறந்த கோயில்கள் இருந்திருக்கவேண்டுமென்றும், ஆனு லவைகளில் முக்கியமானவை மகமதியரா லழிக்கப்பட்டனவென்றும், மதுரையில் இக்காலத்தில் ஜீர்ணமடைந்துநிற்கும் சூர்யன்கோவில் அது பணிந் தமைக்கப்பெற்ற 11-ம் நூற்றாண்டினாரம்பகாலத்தில் விளங்கின சிறந்த சிற்பப்பணிக்குச் சான்றாகுமென்றும் அங்கு சொல்லியிருக்கிறது. 10 முதல் 12-ம் நூற்றாண்டுகளில் குஜராத்தில் பல சிறந்தகோயில்களிருந்தனவென்றே வைத்துக்கொள்வோம். அந்தநாட்டில் நூதன விதப் பணியொன்றிருந்ததாக இதனுலேற்படாது. சிற்பத்தில் திராவிடரீதி, சளுக்கியரீதி, சீனரீதி, காச்மீரரீதி என்றிருப்பனபோல கூர்ஜாரீதியொன்றிருந்ததாகக் காணப்படவில்லை. ஒருவேளை இருந்ததாகக் கருதினும், எக்காலத்தி லதுதோன்றியது? 10 அல்லது 11-ம் நூற்றாண்டுக்குமுன் பலநூற்றாண்டுகாலமாக விளங்கிவந்ததென்றுசொல்ல ஆதாரவொன்றுங் காணேம். அன்றியும் பழைய கூர்ஜரதேசம் இக்காலத்து, குஜராத்தென்று வழங்கும் பிரதேசமன்று.

பௌத்தர்களின் கற்பாறையிற் குடைந்த குடிகைகள் கி. மு. 2-ம் நூற்றாண்டுமுதல் இருந்துவருவனவாகத் தெரிகிறது. கி. மு. 3-ம் நூற்றாண்டுமுதல் தென்னிந்தியாவில் விடாபிக்க ஆரம்பித்தது. இக் காரணங்களால் 'குச்சரக்குடிகைக்கு, கற்பாறையிற்குடைந்த சிற்றில்' என்று பொருள்கொள்வது இலக்கணத்திற்கும் சரித்திரத்திற்கும் பொருந்துமென்று நினைக்கிறேன்.

கே. ஜி. சேஷையர்.

பொருணூற்சிறப்பு—II.

(க௬0—ம் பக்கத்தொடர்ச்சி)

அன்பினைந்திணையுரை.

இறைவனுரைத்த இந்நூலுக்கு இரண்டு உரைகள் உள்ளன. ஒன்று கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த புறக்கருத்துரை மற்றொன்று குமாரநாயகனுரைத்த அகக்கருத்துரை. நக்கீரனாருரையைக் கற்றுணர்ந்தோர் மண்ணகத்துப் புலவராற் போற்றப்படுவாரெனின், குமாரநாயகனுரையின் உண்மையையுணர்ந்தோர் மண்ணகத்துப்புலவரும் வானகத்துப்புலவரும் போற்றத்தேவரினும் மிக்கோராயந்தமிலின்பத் தழிவில்வீட்டைப்பெறுவாரென்பது கூறாமலேயமைகின்றது. மேலாகியவீடுபேறே அகப்பொருணூலுக்குப்பயனாக அமைந்தது. அஃதன்றி வாளா ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே நிகழ்ந்த அன்பின் பெருக்கத்தைக்கூறுவதற்கு ஆண்டாலும் வேதங்களாலும் அளவிடற்கரிய பரம்பொருளாகிய எம்மிறைவன் ஒருநூல் செய்தளித்தானென்பது ஒருவாற்றானும் பொருந்தாததாகும். தமிழ்மொழியறிஞர்பலர் நக்கீரனாருரைத்த புறக்கருத்துரையில் ஈடுபட்டு மறுமைப்பயனையிழக்குந்தகையராயினார். இது எற்றினானாயிற்றென்றால், குமாரநாயகனுரைத்த குறிப்புரையின்திறத்தை யுணராமையினான் ஆயிற்று. இவ்வுண்மையுரையின்றன்மையிதுவெனவும், இதனைக்கற்பதற்கு அதிகாரி யாவார் இவர் எனவும் எமது சிற்றறிவுக்கு எட்டிய அளவு எடுத்துக் காட்டுதற்கெண்ணினார். முதற்கண் உரைவெளியிடப்பட்ட அவைக்களத்தினியல்பைக் கூறி அப்பாற்செல்வாம்.

நான்மாடக்கூடலாகிய மதுரைத்திருநகரியிலே, சரஸ்வதிதேவியின் அம்சமாகிய நாற்பத்தொன்பதின்மர் தமிழ்ப்புலவர், கன்மாப்பலகையேறியிருந்து தமிழாராய்ச்சி செய்துகொண்டிருந்தகாலத்திலொருநாள், அழகே யோருருவெடுத்தாலனைய ஐந்துவயதுப் பாலகனொருவன், புலவரவைக்களத்து வந்துநின்றான். வெள்ளைவஸ்திரந்தரித்து, வெண்ணிற மலர்மாலைசூடிய மாசற்றதோற்றமும், பால்மணமாறாச் சிவந்த வாயும், அன்றலர்ந்த தாமரைபோன்றதிருமுகமும் குறுநகையும் விளங்க

நின்ற அச் செல்வச்சிறுவனைக் கண்டமாத்திரத்தே, புலவர் அனைவரும் இருக்கைவிட்டெழுந்து சிரத்திற்குவித்த கரத்தினராகிப் பலவாறுய மங்கல நன்மொழிகளால் வாழ்த்துரைகூறி அவ்விளஞ்சிறுவனை ஆசனத்திருத்தித் தாங்கீழிருந்து அவனது திருமுகமண்டலத்தின் பொலிவைப் பார்த்தவண்ணமாக விருந்தனர்.

கபிலர் என்னும் பெரும்புலவர் அச் சிறுவனைப்பார்த்து, "உப்பூரிகுடிகிழார் இழைத்த அருந்தவத்தின் பெரும்பேறே! சிறியேமாகிய யாங்கள் பொருளிலக்கணம் கிடைக்கப்பெறுமையாற்கவலுற்றேமாக ஆலவாயிலவிர்சடைக்கடவுள் எம்முறு துயர்க்கிரங்கி, அறுபது சூத்திரங்களாலாய ஒருநூலையருளிச்செய்தனன்; அந்நூற்குப் பொருள்வரையறை செய்து உண்மையுணர்த்தவல்ல ஒரு காருணிகனைத் தருமாறு அக் கடவுளையே வேண்டிநின்றேம், இளமைச்செவ்விவாய்ந்த தேவரீரைப்பெற்றேம்; பொருள்வரையறுத்து உண்மை யுணர்த்தியருளவேண்டு"மென்று இரந்து வேண்டினர்". உருத்திரசர்மன் என்னும் அக்குழவிப்பருவத்து அறிஞன் குளிர்ச்சிபொருந்திய தனது பசியகண்ணிணைற் கபிலரைப் பார்த்துவிட்டு ஒன்றும் பேசாதிருந்தனன். புலவருட்சிலர் தாந்தாங் கொண்ட உரையினைவிரித்துச் சொல்லிமுடித்தபின்னர், கணக்காயனார் மகனார் நக்கீரனார் எழுந்து தாங்கண்ட உரையினை எடுத்துமொழிந்தார். அவ்வுரையைக் கேட்டமையினாலோ பிறிதெக்காரணத்தினாலோ சிறுவன "பதந்தொறுங்" கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர்சிலிர்ப்பப் புலவரனைவரும் ஆர்ப்பரித்து, மெய்யுரை பெற்றும" இந்நூற்கென்றார். அன்றுமுதல் இறையனாரகப்பொருள் என்னும் அருநூலுக்கு நக்கீரனாரையே உரையாகவழங்கிவருகின்றது. நூல் அருநூல்; ஆதலினாலே; அதற்கு நக்கீரனாருரைத்த மொழிவயிற்கிடந்த பொருளுரையைவிட, மொழித்திறத்தா னுரைக்கவொண்ணாத ஒரு அருளுரையும் இருத்தல்வேண்டுமென ஆராய்தல் ஒருதலை. என்னை? அருமறைமொழியுரைத்தமுடிபும் பொருணூன்முடிபும் ஒன்றேயாதலினாலும், ஆரணநூலும் அன்பினைந்திணையுங் காரணங்கடந்த கடவுள்வாக்காதலினாலும் ஐந்திணையுரைக்கும் அன்பின்றிறம் உள்ளத்துணர்வாலனுபவிப்பதேயன்றி இன்னவாறிருந்ததெனப் பிறர்க்குச் சொல்லுந்தரத்ததன்றாகலானும், நக்கீரனாருரைத்த உரை சொற்பொருளாகவிருக்குமிடல்பினதோன்றி அநுபவப்

பொருளாகாதென்பது அனைவர்க்குமொப்பமுடிந்த முடிபேயாம். அன்பினைந்திணைக்கு இலக்கியமாய் நின்ற ஐந்திணைக் கோவையினது உண்மைப்பொருளே அன்பினைந்திணைக்குமுண்மைப்பொருளாதல்வேண்டுமெனத் துணிந்துகோடல்மரபேயாம்.

பிற்றைநாளில், மணிவாசகப்பெருமான் ஐந்திணைக்கோவையை முற்றுவிக்க, அதனைத் திருச்சிற்றம்பலமுடையார் தமது அருமைத் திருக்கரத்தினுல் எழுதித்தர, அங்ஙனம் எழுந்தநூலைப் பஞ்சாக்கரத் திருப்படியிற்கண்ட பெரியோர் வாதவூரடிகளைநோக்கி "ஐய! இந்நூற்குப் பொருள் கூறிய நள்கவென வினவினர். அங்ஙனம் வினவினர்க்கு, அடிகள் மௌனமாக நின்று, தம்மொருகரத்துச் சுட்டுவிரலினுல் மணிமன்றுணடிக்கும் இறைவனைச்சுட்டிக்காட்டிப் பரவெளியோடொருமைப் பட்டனரெனப் புராணங் கூறுகின்றது. இங்ஙனம் ஐந்திணைக்குப் பொருள்கூறிய ஆற்றினை நோக்கும்போது பெரியதோர் ஞானமுடிபு புலப்படுகின்றது. சொல்லினுற்சொல்லும் உண்மையுமுளது; சொல்லாமற் சொல்லும் உண்மையுமுளது. கல்லாலின்புடையமர்ந்து எம்மிறைவன் நால்வர் முனிவருக்கு மேலாகிய உண்மைப்பொருளினைச் சொல்லாமற் சொல்லினுன். மணிமன்றுண் முன்னின்ற மணிவாசகஅடிகள் தமது அருணூற்பொருளினைச் சொல்லாமற் சொல்லியருளினுர். இப்பரிசே ஐந்துவயதுமூங்கைப்பிள்ளையின் உருவொடுதோற்றிய குமரநாயகனுகிய உருத்திரசருமரும் இறைவனளித்த அருணூலின்பொருளைச் சொல்லாமற் சொல்லியருளினுர்

அன்பின்வயத்திலீடுபட்டுக் கண்ணீருங் கம்பலையுமாகித் தம்மை மறந்து பரவசராகின்ற உருத்திரசருமனுர் குறிப்பினுலுணர்த்த உண்மையை இலக்கண நூலில் ஈடுபட்டுநின்றமுதுதமிழ்ப்புலவர் பொருட்படுத்தினுரல்லர். நக்கீரனுர் உரைவிரித்த தருணமும் குமாரர்பசனுகிய உருத்திரசருமர் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர்சிலிர்த்த தருணமும் ஒன்றுயிருந்தமையினுல் அவைக்களத்திருந்தோர் காகதாலீயநியாயமாக உரையைக்கேட்ட இளையபிள்ளையார் அவ்வுரையிலீடுபட்டுக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர்சிலிர்த்தாரென்ப. இது பொருந்தாது. "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் அருளுரைச் செய்யுள் ஒன்றனுக்குப் பொருள் காணவொண்ணுது தியங்கிய நக்கிரனுர் அன்பினைந்திணைக்குப்

பொருள்கண்டாரென்பது அன்பாயினார்க்கு நகையைவிளைப்பதொன் றன்றே? அங்ஙனமாயின் அன்பினைந்திணைக்கு மெய்யுரைகண்டார் யாரோவெனின் முருகமூர்த்தியே மெய்யுரைகண்டாரென்பது. தமிழ்ப் பெருங்குரவனது அவதாரமாகிய உருத்திரசருமர் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர்சிலிர்த்து உரையாடாது பரவசராயிருந்த குறிப்பே அன்பி னைந்திணைக்குப் பெரியதோருரையாயிற்று. இக்குறிப்பினுட்பட்டுநின்ற முடிபுகளை உரைக்கவல்லார் யாவர்? "அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று, அதுவும் ஞானத்திடையதாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என அருள்சுரந்தளித்த நூலன்றே அன்பினைந்திணை. இறைமொழியாகிய இந்நூல் நனியுயர்ந்த வீடுபேற்று ஞானத்தையுணர்த்துவது.

"எழுத்துச்சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளின்பொருட்டு" ஆதல்போல அறமும் பொருளும் இன்பமும் ஆராய்வது வீடுபேற்றின் பொருட்டு. வீடுபேற்றின்பொருட்டு இறைவனுரைத்த இந்நூலுக்குப் புலவர் அறத்தின்பாலெனப் பொருளின்பாலென இன்பத்தின்பாலெனப் பலவுரைகூறி மயங்குவாராயினர். இதுகண்டு பரிவுற்ற கறைமிடற் றண்ணல் "ஐயாட்டைப்பிராயத்து மூங்கைப்பிள்ளைபால் உரையுணர்ந்து தெளிமின்" எனப்பணித்தருளினன். எம்மண்ணல் தென்முகக் கடவுளாய்க் கல்லாலின்புடையமர்ந்து சொல்லாமற் சொல்லிய உண்மை யைக் குமரநாயகனுஞ் சொல்லாமற்சொல்லினன்.

உளத்துக்கொண்ட பெருமிதத்தினால் உண்மையுணராது அலைவுற்ற முதுதமிழ்ப்புலவரை நோக்கி, "பலவாயசொற் பெருக்குங் கல்வியினாற் பரஞானமடையப்பெறீர், உண்மையுணரவேண்டின் நீவிர் ஊமராதல்வேண்டு"மென்னுங்குறிப்பினையுணர்த்துதற்கோ, எம்மிறை வன் "ஊமைப்பிள்ளைபால் உண்மையுணர்மின்," எனப்பணித்தனன்.

"சொல்லாடாதுமலைப்போற் சொல்லிறந்து நீயாகி
னல்லாலெனக்குமுத்தியாமோபராபரமே,

பேசாதமோனநிலைபெற்றன்றோநின்னருளாம்.
வாசாமகோசரந்தான்வாய்க்கும்பராபரமே,"

என்றபெரியாருரையின்படி. பொருணூற் பொருளுணரவேண்டினோர் ஊமராதல்வேண்டும், அஃதன்றியும் வஞ்சம், பொறாமை, லோபம் மதம் என்னும் அழுக்குப்படியாத ஐயாட்டைப்பிராயத்துப்பாலர் நீர்மையை யாதல்வேண்டும்; "அன்பாற்கரைந்து கண்ணீராறுகண்ட புண்ணிய ரா"தல்வேண்டும் இவையாவும் உருத்திரசருமரிடத்துக்காணப்பட்ட குணங்களாதலின் அவருரைத்த உரையின் பெருமையில் ஒருசிறிதை யாயினும் யாமுணர்ந்து கொள்ள விரும்புவோமாயின்யாமும் அந்நீர்மை யாதல்வேண்டும். இறைவனுடைய பேரருளின் இரகசியத்தையார் தாமறிய வல்லார்? முது தமிழ்ப்புலவர் நாற்பத்தொன்பதின்மராலறிதற் கரியஉண்மை ஐயாட்டைப்பிராயத்து மூங்கைப்பிள்ளையால் உணர்தற் கெளியதாயிற்று. வாரீர், தமிழ்ப்புலவீர், நரிவாலைக்கொண்டு கடலாழங்காணவல்லிரோ? அருண்ஞானவொளியின் முன்னர் நும்மறிவு ஆதவன்முன் மின்மினியாகுமன்றோ? அன்பின்மேனதாகிய இவ்வரு ணூலுக்குப் பொருள்காணவிழைவீரேல் நுமது நூற்கல்வியனைத்தினை யும் தென்றிசைக்கடலினுள் வீசியெறிந்துவிட்டு, அன்பின் வயத்தராய் உளமுருகிக் கண்ணீருங்கம்பலையுமாய் உரையொழிந்து நின்மின்; அந்நிலையில் அன்பின்பெருக்கத்தை யுணர்ந்தநுபவிப்பதற்குரிமை பூணுவீர்; இதுவேவழி" என்னுங் குறிப்பை வெளிப்படுத்து தற்காகவோ தமிழ்ப் பெருங்குரவனாகிய குமாரநாயகன் ஐயாட்டைப் பிராயத்து மூங்கைப் பிள்ளையாய்க் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்த்து நின்றனன்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பிரபோதசைதந்யர்.

ஸ்ரீ

சிலப்பதிகாரவாராய்ச்சி.

இந்நூல் சிலம்புகாரணமான நிகழ்ச்சியைக் கூறும் கூற்றிற்கு நிலைக்களமாயிருத்தலின் சிலப்பதிகாரமென்னும் பெயர்த்து. அல்லதூஉம் சிலம்பின் ஆணையால் நடைபெறுகின்ற கதையைக்கூறுதலின் அப்பெயர்த்தாயிற்றெனினும் இழுக்காது.

சிலம்பென்பது திரிபுபற்றிய செய்யுட்சொல்லாய் ஈண்டு வலிந்து நின்றது. இலக்கணநெறியானே மென்றொடர்மொழிகளைப் புணர்க்குமிடத்து வன்றொடராகத் திரித்துவழங்குதல் மரபாயினும் சிலம்பென்னுஞ்சொல் பரம்பிற்பாரி என்பதுபோலச் சிலம்படி, சிலம்பொலி, சிலம்பாறென யாண்டும் திரிபின்றியே வழக்குப்பெறுதலின் சிலப்பதிகாரமென்னு மித்தொடர் செய்யுட்சொல்லால்வழங்கியதென்றே கொள்ளத்தகும்.

அற்றேல், சிலம்பதிகாரமென்னாது சிலப்பதிகாரமெனச் செய்யுட்சொல்லாற்கூறிய தெற்றிற்கெனிற் கூறுவன். தமிழ்மொழிக்கண்ணுள்ள சொற்கள் செய்யுட்சொல்லென்றும் வழக்குச்சொல்லென்றும் இருதிறப்படுவன. அவற்றுட் செய்யுட்சொற்கள் அரிதுணர் பொருளன. வழக்குச்சொற்கள் எல்லோரானும் எளிதிற் பொருளறியத்தகுவன. இவற்றைப் புலவர் ஏற்றபெற்றி எடுத்தாளுவர். மிகத் திரிசொற்களின்றி, மிக எளிதுணர் வழக்குச்சொற்களுமின்றி நூலியற்றுவதே புலமையின்பாற்படும். விளங்குதலரியனவற்றை விளக்கியும், மிகத்தெளிவுள்ளனவற்றைச் சிறிது திரித்தும் வழங்குவது கற்போர்க்கு அறிவுவளரச்செய்து பயனுடையதாகின்றது. அன்றியும், திரிசொற்களே பொருளுணர்ச்சிபெற்றுழிச் சிறிது மகிழ்ச்சியை விளைவிப்பனவுமாகும். ஆதலின் ஆன்றோர்பலரும் அவற்றையே சிறந்தன

வாகக்கருதுப. ஆசிரியர் நச்சினார்க்கினியரும் சிந்தாமணியுள் "தென்றிசையயணமுன்னி" என்புழி இக்கருத்தேபட உரைகூறினார். அது பற்றியே இந்நூலாசிரியரும் சிலப்பதிகாரமெனச் செய்யுட்சொல்லாற் பெயரிட்டாரென்க. அன்றியும் சிறிதேனும் புலமையுடையாரே இந்நூல்பயிலுதற் குரிய ரென்பதற்கும், இதுகேட்டார் மேலும் புலமை எய்துவரென்பதற்கும் அப்பெயர்தானே அறிகுறியாயும் நிற்றல் உய்த்துணரற்பாலது.

அற்றேல் அஃதாக; காப்பியத்தலைவர் பெயரோடு தொடர்புபடுத்து நூற்பெயர்கூறுதலே முறைமைபாகலானும், இந்நூன் முழுதும் கோவலன்கண்ணகிகளின் கதையையேநிகழ்த்துதல் சாண்டுமாகலானும், இதனிடைச் சிலம்பினியைபு மிகச்சிறுபான்மையேயாகலானும்,

> "மத்தகமணியொடுவயிரங்கட்டிய
> பத்திக்கேவணப்பசும்பொற்குடைச்சூற்
> சித்திரச்சிலம்பு—"

என இப்பெற்றியே ஒரோவிடத்தன்றிப் பலவிடங்களிலும் அதன்தன்மை பாராட்டப்பெறுதலில்லையாமாகலானும், சிலப்பதிகாரமென்னும் பெயர் இதற்கேற்குமாறென்னையெனின் அது நன்கு வினவிற்றும்.

இக்காப்பியத்தின் உள்ளுறை மூவகைப் பொருள்களாகப் பகுக்கப் படுகின்றது. அவை மூன்றும் சிலம்புகாரணமாகப் பிறந்தனவென்ப. என்னை?—

> "அரைசியல்பிழைத்தோர்க்கறங்கூற்றுவதூஉம்
> உரைசால்பத்தினிக்குயர்ந்தோரேத்தலும்
> ஊழ்வினையுருத்துவந்தூட்டுமென்பதூஉம்
> சூழ்வினைச்சிலம்புகாரணமாக
> நாட்டுதும்யாமோர்பாட்டுடைச்செய்யுள்"

என்றூ ராசிரியராகவி னென்பது.

அஃதாக; அவை மூன்றற்கும் தனித்தனியே சிலம்பு காரணமாயிற்றென் றலென்னையெனிற் கூறுவன். கண்ணகியின் காலணிகளுள்

ஒன்றனைக் கோவலன் கைக்கொண்டு மாறிவருவலென மதுரைத்தெருவழியே போந்தனன். போந்தவனைக்கள்வனென்று பொற்கொல்லனரசற்குணர்த்தினனாக, அவனும் ஆராய்வின்றிக் கோவலனைக்கொன்றுவருமாறு ஏவலாளரை விடுத்தான். இங்ஙனமரசன் பிழைத்ததூஉம் சிலம்பு காரணமாகவேயாயிற்று.

அன்றியும் கோவலன் கொலைக்களப்பட்டவாறே சிறிய கற்புடையளாய அவன்மனைவி அரசன்பால் வழக்குரைப்பதாயினாள். அஞ்ஞான்றூஉ சிலம்பே அரசன்பிழையை மெய்ப்பித்து அவனுந் தேவியும் உயிர்துறப்பக் காரணமாயமைந்தது. ஆதலால் அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற்றாவது சிலம்பின் செய்தியானே விளங்கிற்றென்க.

உரைசால்பத்தினிக் குயர்ந்தோரேத்தலும் அச்சிலம்பின் கதையானே புலப்படுகின்றது. கண்ணகியின் அணிகலன்கள் பிறவெல்லாவற்றுள்ளும்வைத்து இச்சிலம்பிடை ஓரேற்றமுண்டு. கோவலன் நாடகக்கணிகையோ டாடியகொள்கையின் அரும்பொருள் கெடுத்தஞான்றே பிறகலன்களெல்லாம் அழிதலுற்றன. அவற்றுள் இஃதொன்றுமே எஞ்சிநின்று பிற்பட்ட கதைப்போக்கிற் கின்றியமையாவுறுப்பாயுதவி, தன்னையணியும் பேறு தனக்களித்த தலைவியின் கற்புமிகவிளங்குமாறு செய்து கதையை நிறைவேற்றுகின்றது.

அதுவேயுமன்றி, அச்சிலம்பே கண்ணகிகற்பின் எல்லைநிலங்தெரித்துக் காட்டியதாயிற்று. கோவலன் மாதவிமயக்கிற்பட்டஞான்றுதொட்டுக் கற்புடையணங்காகிய கண்ணகியை அறவே மறந்தொழிந்தான். அன்றியும் அவன் நாடகக்கணிகைபின்பொருட்டாகத் தன் மனையாளின் அணிகலன்களுமகப்படப் பொருள்முழுதுந்தோற்றுவறியனாயினன். அவ்வாறாயினபின்றை அவன் கண்ணகியை எய்தித் தன்வருத்தங்கூறி நாணமுற்று நின்றான். அப்பொழுது தன் அணிகளுள் எஞ்சிநின்றதாகிய சிலம்பினைப் பூண்ணகி அணியாளாயிருந்தாள். கற்புடைமகளிர் தம் கணவர்க்குப் பயனுறுவதாயினன்றே தாம் கோலங்கொள்ளுவது? அன்னளாய கோவலன்மனைவி தன் தலைவன் மாதவிக்களிக்கும் பொருட்குறைபாட்டாற் றன்னையடைந்தானாகக் கருதி அவன்துன்பநீங்கப் புன்முறுவலோடும் 'இன்னும் சிலம்பு ஓரிணையுள; அவற்

றைக் கொண்மின்' என்றாள். "கண்டா ரிகழ்வனவே காதலன்றான் செய்திடினுங், கொண்டானை யல்லாலறியாக் குலமக"ளாகிய கண்ணகி பிற மகளிர் புலத்தற்குற்றதொரு நிலையினும் அது செய்யாது, தன் கொழுநன் எவ்வாற்றானு மின்புறுவதையே தனக்குறுதியாக மேற்கொண்ட கடைப்பிடியுடையளென்பதை உலகறிய விளக்கிக்காட்டி, அத்தன்மை பற்றிப் பின் தெய்வமும் அவளேவல்கேட்குமாறு செய்தது அச்சிலம்பின் காரியமேயென்பது நன்குபெறப்பட்டது.

நிற்க: கோவலனையும் பாண்டியனையும் ஊழ்வினையுருத்துவந்தூட்டியதற்கும் சிலம்பேபற்றுக்கோடாக அமைந்தது. கண்ணகிபால் வறியனாயடைந்த கோவலனுக்கு அவளுந் தன் காற்சிலம்பை யளித்தாளாக அவன், 'சேயிழாய்! கேட்பாயாக; யான் மாடமதுரையகத்துச்சென்று இச் சிலம்பை வாணிகமுதலாகக்கொண்டு, சென்றகலனோடுலந்தபொருளீட்டுதற் குற்றேன்; நீயும் என்னோடெழுக, என் றவட்குக்கூறி வினை கடைக்கூட்ட வியங்கொண்டான்.

அவ்வாறு வினையினதுஏவலைக்கொண்டு மதுரைபுக்க கோவலன் றன்கையிற் சிலம்புகண்டவாறே அரசனும்பிறருமவனைக் கள்வனென் றயிர்த்துக் கொலைபுரிவித்தனர். ஆதலாற் கோவலனையூட்டிய வூழ்வினை சிலம்பையே வாயிலாகக்கொண்டமை தெளியப்பட்டது.

அரசனுக்குரியவினையும் அச்சிலம்பேவழியாக அவனைப்பற்றியது. அவன் கண்ணகிபால் வழக்கிழந்தவனாகவே உயிர்தோற்றதற்கு அச் சிலம்பே உடலாயிற்றென்பது வெளிப்படையாகலின் அஃதீண்டு விரித்துரைக்கவேண்டுவதின்று.

இங்ஙனம் இருவேறு வினைவிளைவுகளையும் இடைநின்று மூட்டுவிக்கின்ற அச் சிலம்பின்தன்மையை என்னென்று வியப்பது? அன்றியுங் கதையின்கட் பலசிறப்பட்ட தொழினிகழ்ச்சிகளையும் தானே கருவியாக நின்று இன்பம்பயக்க நடத்துவிக்கின்ற அதன் சிறப்பெல்லாம் முற்றச் சொல்லிமுடியாததாகின்றது. அதுபற்றியன்றே ஆசிரியரும் "பொற்றருஞ்சிலம்பு" என அதன் தன்மையைப் போற்றியுரைப்பாராயினதூஉமென்க.

எனவே, ஒருதலையா னுய்த்துநோக்குவார்க்குக் கோவலன் கண்ணகிகளின் கதை இச் சிலம்பையொழியச் செல்லாததாயிற்றென்றலும் இழுக்காகாது. ஆதலின் ஆசிரியர் இந்நூற்குச் சிலப்பதிகாரமென்னும் பெயர் எய்தவைத்தது பொருத்தமுடையதே என்க.

அஃதாக; சிலம்பின் சிறப்பினையே ஒருதலையானாராய்தலென்னை? கண்ணகி பெருமையையும் சொல்லிக்காணுமோ? அவளது பெருங்குணங்களையும் அருஞ்செயல்களையும் நினைந்து மகிழாதார் யாவர்? முடிகெழுவேந்தர் முதலாயினாராற் கோயிலெடுத்துக் கொண்டாடுந் தொழுந்தகைமையுடையா ளவளன்றே? அன்றியும் நூன்முழுதும் அவள் சீர்மையே வெள்ளிடைவிலங்கலாய் விளங்கிக்கிடக்குமன்றே? ஆதலின் அத்தகு திருவினையுடைபதலைவியின் பெயரானே காப்பியத்தைப் பெயரிடுதலும் வேண்டற்பாலதாகலானும், உடனெத்த ஆசிரியர் கூலவாணிகன்சாத்தனார் தம்நூலுக்கு மணிமேகலைதுறவு எனப் பெயர்பொறித்திட்டாராகலானும், இந்நூலினையுங் கண்ணகிகதையென்றே கூறுதலினுற்ற இழுக்கென்னை? எனின், அற்றன்று; இவ்வாசிரியர் சிலப்பதிகாரமென்னும் பெயரானே வேறொரு சிறந்தபயனைக் கருதினாரென்க.

அப்பயன்றான் யாதோவெனிற் கூறுவன். சிலப்பதிகாரமென்று பெயரிட்டமையானே ஆசிரியர் கண்ணகிபெருமைக்கொரு குறைபாடியற்றினாரென்றல் அமையாது. அவர் சிலம்பைப்பாராட்டிப்புரைத்ததை மனத்துட்கொண்டவாறே அதனைத்தன் உடைமையாகப்பெற்ற தலைவியின் மேம்பாடுகள்யாவும் நினைவின்கண் உடனிகழ்தல் யார்க்குமுண்டாகாதிராது. கண்ணகி பெருமைகளெல்லாம் பல்லாற்றானும் பாராட்டற்பாலனவாயினும் அவை விளக்க முறுதற்குக் காரணமாயமைந்த சிலம்பின்றன்மையும் மறக்கற்பாலதன்றே? ஆதலாற் சிலம்பின் பெருமையைக் குறித்து வழங்கிய அப்பெயரால் ஆசிரியர் கண்ணகியின் ஏற்றமும் புலப்படுத்தியதாகவே கொள்ளப்படும்.

அஃதன்றியும் நூலினுள் மிகவெளிப்பட்டுநிற்கும் கதைத்தலைவியின்பெருமையையே நூற்பெயர்முகத்துப் பெயர்த்தும் விளக்கியதாற் போந்தபயனென்னை? ஆசிரியர் எதனிடைச் சிறந்ததன்மைகள் உள்ளனவாகக்கொண்டனரோ அதன்தன்மை நூலுள்ளே மிகவெளிப்படுதலின்றி

மறைந்துகிடப்பதாயிற்று. ஆதலின் அதனைச் சிறிது வெளிப்படுத்தல் அவர் பெரிதும் வேண்டிற்றென்றாகலின் அதுதோன்றச் சிலப்பதிகார மென்று பெயரினை அமைத்துச்செல்வாராயினர். பின்னர் அதுதானும் தமதுட்கோளை ஏற்றவாறுணர்த்துதற்கு ஆற்றல்பற்றாதெனநினைந்தே, அவர் பதிகத்துக்கண், நூலின் மூவகையுள்ளுறைகட்கும் சிலம்புகாரணமாமாறுகாட்டித் தம் நூற்பெயர்க்காரணத்தை வற்புறுத்தினதூஉமென்க.

இன்னும், அப்பெயர்தானே வேறொருபயனையும் விளைவிக்கின்றது. சிலப்பதிகாரமென்றதனையே நூலுக்கப்பெயர் ஏற்குமாறென்னையென ஆராய்ச்சிநிகழும். நிகழவே, அதன்கட் பொதிந்துகிடக்கும் பொருள் நயங்களையெல்லாம் அரிதிற்றெளிந்து பெரிதும் மாணுக்கன் மனமகிழ்வெய்தும். அங்ஙன மாராய்ச்சியா னறிவுபெருக்கலும் மகிழ்ச்சிவிளைத்தலும் எல்லா நூற்கும் ஒப்ப முடிந்ததாகலானும், 'கண்ணகிகதை' என்ற பெயர் மிகவெளிப்படையாய் அச் சிறப்பியல்பில்லா தொழிதலாலும் சிலப்பதிகாரமென்னும் பெயரையே வேண்டினர் இவ்வாசிரியரென்க. அன்றியும் அடிகள் இந்நூலைத் தமிழ்ப்புலவர்க்கு விருந்தாகப்படைக்கின்றாராகலின் அதன்பெயர் புதியதொருமுறையைப் பின்பற்றியதாயிற்று. மற்று மணிமேகலையாசிரியர் தம்நூற்குப் பிறவாறு பெயர்தந்தாரேயெனின், அவர் அதனினுஞ்சிறந்தது வேறொன்று காணாமையின் அங்ஙனஞ் செய்தாரென்பது. எனவே, இதுகாறுங் கூறியதனானே இந்நூற்குக் கண்ணகிகதையென்று பெயர்கூறாது சிலப்பதிகாரமென்றதே மிகுதியும் வாய்ப்புடைத்தாயிற்றென்பது முடிந்தது.

(தொடரும்.)

T. N. அப்பனையங்கார்,

இராமேசுவரம் தேவஸ்தான வித்தியாசாலை; மதுரை.

அறியவேண்டிய சிலபழங்கதைகள்.

தமிழ் நாட்டிலே அநேக பழஞ்சரிதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவை கேட்பாரும் சொல்வாருமின்றி மறைந்து வருகின்றன. சில உண்மையுடையனவாகலாம், சிலகட்டுக்கதைகளாகவு மிருக்கலாம், எது எதுவரை உண்மையுடையது என்று அறியவேண்டியது கற்றறிந்தார் கடன். இங்கேயான் கேட்ட சிலசரிதங்களைக் கூறுகிறேன்.

(க) கழுக்காணி.

"ஊத்தைதிரண்டுகழுக்காணி" என்றும், "ஆள்வாரற்றகுந்தாணி அடக்குவாரற்ற கழுக்காணி" என்றும் இரண்டு பழமொழிகள் வழங்குகின்றன. இப்பழமொழிகளால் இது சரிவரவேலைசெய்யாத பெண்ணொருத்தியைக்குறிக்கு மொருவசைமொழி என்றாகிறது. அன்றி பிணம் முதலிய அழுகிப்போகும் புலானாற்றமுடைப்பிராணிகளைத் தின்னக்கொத்தும் கழுகுக்கும் அசையாதவளென்னும் பொருள் பயக்குமோவென்று நிச்சயிப்பது பெரியோர் கடனாம்.

இப்படிப்பட்ட கழுக்காணி என்பவளொருத்தி மாயூரத்திற்கு நேர் வடக்கு ஒருமைல் தூரத்தில்உள்ள மடத்தில் வசித்துவந்தனள். அவள் மிக்க சிவநேசமுடையாள். அன்பின் மிகுதியால் தான்சமைத்துவைத்த கறிமுதலிய பண்டங்களைத் தன்னைத்தேடிவந்த சிவநேசர்களுண்ணுதவரை அவர்களை எவ்வுபாயத்தாலாவது உண்ணும்படி செய்தல் அவ்வம்மையார் தொழில். இஃதிங்ஙனமாக; மாமாத்திரர் தங்குலம் பெருக வந்துள்ளார் பலர்புகழுந்திருநாமம் பரஞ்சோதியா ரெனப்பட்ட சிறுத்தொண்டரென்பார் தாம்தமது மனைவியே அறிந்து சமைத்துச் சிவபெருமானுக்கிட்டோமென்று செருக்கடைய, சிவபிரான் அவரது யான் எனுஞ்செருக்கடக்கக்கருதி அவரை ஒளித்து வைத்துத்தாமொரு சிவ

நேசர் உருவந்தாங்கிப்போந்து அம்மையாரைக்காண அவள் கூசாது விருந்திட அக்காலத்துப் பிள்ளையில்லாவீட்டில் தானுண்ணும் வழக்காறு இல்லையென்றவளவிலே அம்மையார் சிறிதெழுந்து நடையிற் சாற்றியிருந்த கடையுலக்கையை எடுத்து உண்ணுவிடில் நையப்புடைப்பதாகக் கூறினாளாம் நீலமார்கண்டத்தெண்டோணிருத்தராம் எம்பெருமான் மறைந்து ஆனேறுடையானாய்க் காட்சிதந்தானென்றும் அந்நாட்டொட்டு அத்திருமடம் இருந்தவூர் கழுக்காணிமடம என்று வழங்கவும் அவ்வம்மையார் கோயில் பெற்று வாழவும் மறைந்திருந்த தங்களிற்றுரிமை முறையினராஞ்சிவனடிமைத் தொழும்புபூண்டசிறுத்தொண்டர் அவரது ஆலயத்துக்குத் தென்கிழக்கிலுள்ள சிவலிங்கத்தில் ஒடுங்கியதாகவும் கூறுகின்றனர். அதற்குச் சான்றாகத் தென்கிழக்கில் கைலாசநாதர் கோயில் என்றொருகோயிலும் அதனுள் சிவலிங்கத்திற்குப் பக்கத்தில் தாடியையுடைய ஒரு உருவத்தை சிறுத்தொண்டரெனவும் காட்டுகின்றனர்.

இவ்வாலயம் மிகவும் பழுதுபட்டும் அதனிலிருந்து கல்வெட்டுக்கள் பேர்க்கப்பட்டும், வெகுகேவலமான ஸ்திதியிலிருக்கிறது தென்புறமுள்ளமேடையில் ஒரேயொருகல்லில் மாத்திரம் ஏற்கனவே கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருந்தன வென்பதைக்காட்டக்கூடிய அடையாளங்களிருக்கின்றன. (தொடரும்)

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

உ

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(௱௨௪—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

141. கொல் ஆழி நீத்(து) அங்(கு) ஓர் குனி வயிரச்
சிலை தடம் கை கொண்ட கொண்டல்,
எல் ஆழித் தேர் இரவி இளங் கரத்தால்
அடி வருடி அனந்தல் தீர்ப்ப,
அல் ஆழிக் கரை கண்டான், ஆயிர வாய்
மணி விளக்கம் அழலும் சேக்கைத்
தொல் ஆழித் துயிலாதே துயர் ஆழி
இடைக் கிடந்து துயில்கின்றானே!

இ-ள். (உலகத்தார் துன்பம் நீங்கும்படி இராவணாதி யரக்கரைச் சங்கரிக்கும் பொருட்டுச்) சக்கரத்தை நீக்கிக் கோதண்டத்தைக் கைக்கொண்ட (திருமாலாகிய) இராமபிரான், ஆயிரம் வாய்களிலும் இரத்தின தீபங்கள் ஒளிர்கின்ற (அநந்த) சயனத்திலே திருப்பாற்கடலிலே (இனிதாகத்) தூங்காமல் (விரகவேதனைப்பட்டுத்) துன்பக் கடலிலே தூங்குகின்றவரை (உதய) சூரியன் இளங் கிரணக் கைகளால் அடிவருடித் தூக்கம் நீக்க, இரவாகிய கடலினது கரையைக் கண்டார்.

கொல் — (பகைவரைக்) கொல்லும். ஆழி — சக்கரம். குனித்தல் — வளைத்தல். வயிரச் சிலை — வன்மையான வில். தடம் — அகலம். கொண்டல் — மேகம் (போன்ற இராமன்). எல் — ஒளி. ஆழி — உருள்— சக்கரம். இரவி — சூரியன். கரம் — 1. கை; 2. கிரணம்: சிலேடையாக இருபொருளும் குறித்தது. அனந்தல் — நித்திரை. தீர்ப்ப — நீக்க. அல் — இரவு. ஆழி — கடல். சேக்கை — படுக்கை. தொல் ஆழி — பழமையான (திருப்பாற்) கடல். துயர் ஆழி — துன்பக்கடல்

துன்பம் எட்டிப்பார்க்கக் கூடாத பரமானந்த தசையிலிருக்கும் பகவான் மனிதர் துன்பத்தை நீக்க மனிதனாகப் பிறந்த இடத்தே சாதாரணமனிதர்போலத் துன்பமுறுதல் பரிதாபகரமான தென்பதனை

உணர்த்தப் பாற்கடலிற் றூங்குவோன் துன்பக்கடலுள்ளே தூங்குகின்றனென்று நயம்பட வுரைத்தார்.

"உயர்ந்தோர் துயிலாநிற்பின், அவரைத் துயிலுணர்த்தவேண்டுவோர் அடிவருடல் முறைமையென்பது அறநூலின் துணிபாதலால் 'இரவி இளங் கரத்தா லடிவருடி அனந்தல் தீர்ப்ப' என்றார். மெல்லென்றிருத்தல் வேண்டுதலின் 'இளங்கரத்தால்' என்றுங் கூறினர். ஸ்ரீராமசாமிநாயுடு.

[சூரியோதயத்தில் நித்திரை நீங்கி யெழுந்த இராமபிரான், காலைக் கடன்களை முடித்து, விசுவாமித்திரர் இலக்குமணருடன் சனகராசரது வேள்விச்சாலையை அடைந்தார். சனகர் வேள்வியை நிறைவேற்றிவிட்டுத் தம் அரண்மனையைச் சேர்ந்து அங்கே சபாமண்டபத்திலே தம் பக்கத்திலே இராமலக்குமணரை இருக்கச்செய்து முனிவரோடு வீற்றிருந்தார். அப்போது,]

142. இருந்த குலக் குமரர்தமை இரு கண்ணும்
முகத்(து)அழகு பருக நோக்கி,
அருந் தவனை அடிவணங்கி "ஆரை இவர்?
உரைத்திடுமின் அடிகள்" என்ன,
"விருந்தினர்கள்; நின்னுடைய வேள்வி கா
ணிய வந்தார்; வில்லும் காண்பார்;
பெரும் தகைமைத் தசரதன் தன் புதல்வர்;" என
அவர் தகைமை பேச லுற்றான்.

இ-ள். (சனகர்) விசுவாமித்திரரை அடிதொழுது (தம்பக்கத்திலே) இருந்த இராசகுமாரரை அவர்களுடைய முகத்தின் அழகை அருந்தும்படி (விரும்பியவர்போலப்) பார்த்துச் "சுவாமிகளே! இவர்கள் யார்? (இவர்கள் வரலாற்றைச்) சொல்லுங்கள்" என, (அவர் "இவர்கள் உமது) விருந்தினர்; உமது வேள்வியைப் பார்க்க வந்தார்கள்; ('இதனை எவர் வளைத்தாரோ, அவர் சீதாதேவியை மணஞ்செய்யப் பெறுவர்' என்று நீர்வைத்திருக்கும்) வில் (சின் ஆற்ற) லேயும் (பார்க்கச் சொன்னால்) பார்க்கத்தக்கவர்கள்; தசாதகுமாரர்;" என்று சொல்லி அவர்களுடைய (குலத்தின்) பெருமையைக் கூறுவாராயினர்.

'குலக்குமார்' என்பதில் குலம், 'குலமகள்' குலமணி' என்பவை களிற்போல உயர்ந்த சாதியைக் குறித்துநின்றது. பருகல்—1. குடித்தல்; 2. விழுங்குதல். ஆரை என்பதில் ஐ அசை (சிந்தாமணி) அடிகள்—தேவரீர். காணிய—காண. இரண்டாம் 'தகைமை'யின் பொருள் 'பெருமை' (உரிச்சொல்நிகண்டு உ.ங.கூ) 'அடிகள்! இவர் யாரை உரைத்திடுமின்' எனக்கூட்டுக.

'வில்லும் காண்பார்' என்பதனில் வரும் உம்மையிற் குறிப்பாக வுள்ள இனியபொருள் ஊன்றி நோக்கத்தக்கது. இவர்களும் மற்றவர்களைப்போல வேள்வியைக் காணவந்தவர்களாயினும், இவர்கள், அந்த மற்றவர்களைப் போலல்லாமல், வில்லின்வன்மை முழுவதையும் பார்க்க வல்லரென்றகருத்தை அந்த உம்மை குறிப்பித்து நின்றது. இராம லக்குமணர் அவ்வாறு பார்க்கவல்லவரென்பதை நம்பச்செய்ய, 'மகனறிவு தந்தையறிவு' என்றபடி அவர்கள் (சம்பராசுரனை வென்றது முதலிய) பெருந்தகுதிப்பாடுகளுடைய தசரதாது குமாரரென்று கூறி, அந்த நம்பிக்கையை வலியுறுத்த, அவர்கள் குலத்து முன்னோர் 'செயற்கரிய செய்வார் பெரியோர்' என்பதற்கு உதாரணங்களாக விளங்கினூர்கள் என்பதைக் கூறுமுகத்தால் அடுத்த 'குலமுறைகிளத்துபடல'த்துக்குத் தோற்றுவாய் மிகப்பொருத்தமாகச் செய்யப்பட்டிருக்கின்றது. 'அவர் குலப்பெருமை அவர் பெருமை யென்றுணர்த்த 'அவர் குலத்தகைமை பேசலுற்றான்' என்னது 'அவர் தகைமை பேசலுற்றான் என்று குல முறைகூறத் தொடங்கி 'ஈதிவர்குலவரலாறு' எனமுடியாமல் 'ஈதிவன்றன்வரலாறு' எனமுடித்தார் (குலமுறைகி உகூ).

'வில்வல்லான்' என்பது வில்லைவளைத்தலும் நாணேற்றலும் அம் பெய்தலும் செய்யவல்லானென்று பொருள்படுதலைக்கொண்டும், "முனைவன் கண்டது (—செய்தது) முதல் நூலாகும்" என்பதிற்போலக் காணலுக்குச் செய்தலென்னும் பொருளுண்மைபற்றியும் 'வில்லுங் காண்பார்' என்பதற்குச் சீதாதேவி மணப்பொருட்டுள்ள வில்லை வளைத்தல் முதலிய மேற்கூறிய முத்தொழிலும் செய்வாரென்றும் பொருள் கொள்ளலாம்.

குலமுறைகிளத்து படலம்.

இராமரது குல மரபு கூறுவது (முறை—முறைமை—மரபு—பாரம் பரியம். சூடாமணிநிகண்டு).

143. பிணி அரங்க வினை அகலப் பெரும் காலம் தவம் பேணி,
மணி அரங்க நெடு முடியாய், மலர் அயனே வழிபட்ட
பணி அரங்கம் பெரும் பாயற் பரஞ்சுடரை யாம் காண
அணி அரங்கம் தந்தானை அறியாதார் அறியாதார்.

இ-ள். "ஸ்ரீரங்கத்தில் பரஞ்சோதியாகிய ரங்கநாத சுவாமியைக் கொண்டு வந்(து பிரதிட்டை செய்) தவனை அறியாதவர் (ஒருவருமிலர் எவரேனு முளரேல், அவர்) மூடரே.

பிணி—நோய். அரங்க—சிதைய—கெட. அரங்குதல் தன்வினை; அரக்குதல் பிறவினை: அரக்குதல்—சிதைத்தல் (சூடா நிகண்டு) மணி அரங்கு அம் நெடும் முடியாய்—இரத்தினங்கள் அழுந்திய (அழுத்தப்பட்ட) பெரிய கிரீடத்தையுடைய சனகராசனே. பணி அரங்கப்பாயற் பரஞ்சுடர்—பணிகளை(—காளிங்கன் ஆதிசேடனென்னும் பாம்புகளை முறையே) அரங்கு (ஆடும் இடம்) பாயல் (—படுக்கை) ஆகவுடைய பரஞ்சோதி. யாம் காண—நாங்கள் தரிசனைசெய்ய. அணி அரங்கம் தந்தான்—அழகுடைய ஸ்ரீரங்க ஸ்தலத்தில் கொண்டுவந்தவன் (ஆகிய இக்ஷ்வாகு என்ற அரசன்) அறியாதார்—1. தெரியாதவர்; 2. மூடர். இப்பாட்டுத் திரிபாக அமைந்துள்ளது காண்க.

'அறியாதார் அறியாதா'ரென ஒருசொல்லையே மடக்கியுரைத்து இக்குவாகு என்ற பிரசித்தனை அரசனைப்பற்றிய அறிவில்லாதவர் அறிவில்லாதவரென நயம்படக்கூறியது பாராட்டற்பாலது.

144. "அரசன் அவன் பின்னோரை என்னாலும் அளப்(பு) அரிதால்.
உரை குறுக நிமிர் கீர்த்தி இவர் குலத்தோன் ஒருவன்காண்,
நரை திரை மூப்(பு) இவை எய்தி இந்திரனும் நந்தாமல்
சூரைகடலை நெடு வரையால் கடைந்(து)அமுதம் கொடுத்தானும்.

இ-ள். "அவனுடைய பின்னோர்களை (எத்தனையரென) எதனாலும் கணக்கிடுதல் இயலாதது. இந்திரன் இறவாமல் (அவனுக்குக்)

கடலை மலைகொண்டு கடைந்து அமுதம் கொடுத்தோன் இவர்குலத்தோன் ஒருவனே.

அரசனவன்—அரசனாகிய அவன்—இப்படலத்து ரு-ம் பாட்டிற் குறித்த ககுத்தன். என்னாலும்—எதனாலும்—எந்த அளவுகருவியாலும். என்—யாது—எது. என்னாலும் என்பதனில் உள்ள 'என்', "என்னானும் வேண்டுவ என்றிகழ்வர்" (நாலடி) என்பதனில் உள்ள 'என்' போல்வது. உரை குறுக நிமிர் கீர்த்தி—தன்னை எடுத்துச் சொல்லப்புகுந்தார் சொல்லச்சொல்ல அமையாமல் அவர் சொல் குறுகும் படி மேலும் மேலும் வளர்கின்ற கீர்த்தி. இவர்—கீர்த்தியையுடைய இவர். இந்திரனும் என்பதில் உம்மை அசைநிலை (புறநானூறு, உகச உரை) நந்தாமல்—கெடாமல்; இங்கே இறவாமல் என்ற பொருள்குறித்தது. குரைகடல்-ஒலிக்கின்ற கடல். நெடுமலை—பெரியமலை. நெடுமை—பெருமை. (சிந்தாமணி) கொடுத்தானும் என்பதில் உம்மை இறந்தது தழுவியது.

"என்னாலும் அரிது—எனக்கும் அரிதாகும்" என்றும், இதில் உள்ள "உம்மை உயர்வு சிறப்பு" என்றும் உரையுண்டு. இவ் உரைகாரர் விசுவாமித்திரர் தற்புகழ்ச்சியாக 'என்னாலும்' என்றாரென்று கருதினர் போலும்.

'நரை திரை மூப்பிவை மாற்றி, என்றும் பாடம். அதற்கு நரைதிரை மூப்பாகிய இவைகளை இந்திரனுக்கு நீக்கி அவன் இறவாமல் அவனுக்கு அமுதங்கொடுத்தவன் எனப் பொருள் கொள்க. மாற்றுதல்—நீக்குதல் (ஐங்குறுநூறு).

'உரை குறுக நிமிர் கீர்த்தி' என்ற சொற்றொடர், சொற் சுருக்கமும் பொருட் பெருக்கமும் தொனிப் பொருத்தமும் வாய்ந்து, நினைக்கும் தோறும் மனத்துக்கின்பம் பயப்பதாயுள்ளது. கம்பர் ஒருதனிப் பாட்டில் "வாணன் புகழ்க்கெல்லை வாழ்த்துவோர் நாவெல்லை" என்றதை இச் சொற்றொடர்க்கு வியாக்கியானமாகக் கொள்ளலாம்.

145. "வில் என்னும் நெடுவரையால் வேந்(து)என்னும் கடல் கலக்கி
எல் என்னும் மணி முறுவல் இந்துமதி எனும் திருவை,
அல் என்னும் திரு நிறத்த அரி அன்ன, அயன் என்பான்
மல் என்னும் திரள் புயத்துக்(கு) அணி என்ன வைத்தானே.

இ.-ள். (இவர்கள் பாட்டனுகிய) அயனென்ற அரசன், வில்லாகிய மலேயினுல் அரசராகிய கடலேக் கலக்கி, (மலேயாற் கடலேக் கலக்கித்திரு மகளே மார்பில் அணிந்த) திருமால்போல, இந்துமதியென்னும் திரு மகளேத் தோளில் ஆபரணமாக அணிந்தான்.

எல்-ஒளி. மணிமுறுவல்—1. முத்துப் (போன்ற) பல்; 2. அழகு (ஆன) சிரிப்பு. திருவை—இலக்குமியை. திருநிறத்த—அழகான நிறத்தையுடைய. அரி-திருமால். தோளில் ஆபரணமாக அணிந்தான் என்பது மணஞ்செய்து கொண்டான் என்பதைக் குறிப்பித்தது.

'எல் என்னும்' என்பதிலும் 'மல் என்னும்' என்பதிலும் வரும் 'என்னும்' என்றசொல், தனக்குச் செம்பொருளான 'என்கின்ற' அல்லது 'ஆன' எனப்பொருள்படாமல், அடுத்துநின்ற சொற்களின் பொருளுக்குப் பொருந்தச் 'செய்கின்ற' என்று பொருள்பட நின்ற தன் காரணம் அச்சொல் எதுகையில் வந்ததே.

கடலேக் கலக்கித் திருவை அடைந்து அணியென வைத்ததாக, அயன் அரி இருவருக்கும் பொருந்தக் கூறிய நயம் ஓர்ந்து உணர்ந்து உவத்தற்குரியது.

["அந்த அயனுடைய குமாரர் தசரதர். அவருடைய பெருமையைஅறியாதவரில்லே. அவர் குமாரர் இவர்கள். இவர்களது பெருமை பிரமதேவர்க்கும் சொல்லுதற் கரியது. ஆபினும் யான் அறிந்தபடி ஒருவாறு சொல்கிறேன்: கேளும். இவர்கள் பிதா, தமக்குப்பின் உலகத்தைக் காக்கச் சந்ததி யில்லேயென்று வருந்தி இரந்து, கலேக்கோட்டு முனிவர் அருளால், இவ்வுலகமேயன்றி எவ்வுலகமும் காக்க வல்ல புத்திரராக, இந்த ராமலக்குமணரையும் பரதசத்துருக்கனரையும் பெற்றுர். இவர்கள் நால்வரும், நால் வேதங்களே ஒத்தவராய், தீவினை செய்த தீவினைப்பயனும், நல்வினைசெய்த நல்வினைப்பயனும் சேர்ந்து உருவெடுத்து வளர்ந்தாற்போல வளர்ந்து, கலேகள் கற்பதில் கலேமகட்குத் தலேவரானுர்கள். இவர்களேப் பெற்றதனுல் தசரதர் பெயர்மட்டில் பிதாவாக, உபநயனஞ் செய்வித்துச் சகல கலேகளுடன் வேத மோதுவித்து வளர்த்து உண்மைப் பிதாவானவர் வசிட்டர். என் வேள்விக்கு இராக்கதர் இடையூறியற்றுமல்

காக்கும் துணையாக இவ்விருவரையும் தசரதரிடம் பெற்று இவர்களுடன் வனத்துக்குவந்தேன். வரவே, அரக்க ரியாரினும் அதிமூர்க்கமுடைய தாடகையே முதல்முதலாக எதிர்ந்தாள்.]

146. "அலை உருவக் கடப் உருவத்(து) ஆண்டகை தன் நீண்(டு)உயர்ந்த
நிலை உருவப் புய வலியை நீ உருவல் நோக்(கு)ஐயா!
உலை உருவக் கனல் உமிழ் கண் தாடகை தன் உரம் உருவி,
மலை உருவி, மரம் உருவி, மண் உருவிற்(று) ஒரு வாளி!

இ. - ள். "சனக ராசரே? அலைவடிவமான கடலின் நிறத்தை யுடைய, ஆண்மையிற்சிறந்த இவருடைய நிலைமையான அழகுடைய தோள்களையும் (அத் தோள்களின் பருமைக்குத்தக்க) பலத்தையும் நீர் (உமது கண்கள் தைத்து) உருவும்படி (ஊன்றிப்) பார்ப்பீராக! (அந்தத் தோட் பலத்தினால் எய்த) ஓர் அம்பு, (கொல்லனது) உலை (யில் உள்ள) செந்தீ (ப்போலும் அக்கினி) கக்கிடும் கண்களையுடைய தாடகையின் பார்பையுருவி (அடுத்து நின்ற) மரத்தை உருவி (அப்பால்) மலையை உருவி (இறுதியாக) மண்ணையும் உருவிப் போனது!

உருவம்—1. வடிவம்; 2 நிறம் (பரிபாடல்); 3. அழகு (சிந்தாமணி); 4. சிவந்த நிறம் (பத்துப்பாட்டு) ஐயன் அரசன் (சங்கஅகராதி) மண்—பூமி. இச்செய்யுள் திரிபாக இருத்தல்காண்க.

'ஐயா!' என்ற அருமைச் சொல்லில் அமைந்து கிடக்கும் அருத்தம் ஆழ்ந்து ஆராயத்தக்கது. அது, 'அரசனே!' என்ற சாதாரணப் பொருளைத் தந்தமட்டிலே நில்லாமல், விசுவாமித்திரருக்கு, அவர் 'காதல் என்தன் உயிர்மேலும் இக்கரியோன் பால்உண்டால்' என்று பின்னர்க் கூறுமாறு ராமர்பாலுள்ள நபப்பையும் அவர் வீரத்தின் பாலுள்ள வியப்பையும் சனகரும் உற்று ஈடுபடச் செய்யும்படி கருதித் தாம் கூறப்போவதைக் கூர்ந்து கவனிக்கச் செய்தற்காகப் பிரியமொழி கூறி அழைத்த விசேடமான பொருளையும் தந்து நின்றது.

(இத்திரட்டு 142-ம் கவியில்) 'வில்லும் காண்பார்' என்றதை நம்புவிக்க இராமரது முன்னோர் அருஞ் செயல்களைக் கூறியவர் இப்போது இராமரது அருஞ் செயல்களைக் கூறத்தொடங்கினர்.

["இவர் விட்ட அம்பு ஒன்றினால் அவள் புத்திரரில் ஒருவனாகிய சுவாகு மடிந்தான்; மற்றொருபுத்திரனாகிய மாரீசன் போன இடம் தெரிந்திலேன். யான் தவஞ் செய்து பெற்றனவாய், ஏவினால் உலகமுழுவதையும் கடலோடும் மலையோடும் எரித்து விடவல்லனவாய், என்னால் இவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஆயுதங்கள், அவைகளைக் கொடுத்த நானுமே நாணமடைய, இவருக்கு ஏவல் செய்கின்றன. இன்னும் இவர் மகிமையைக் கூறுகின்றேன்: கேளும்.]

147. "கோதமன் தன் பன்னிக்கு முன்னை உருக் கொடுத்த(து), இவன்
போது நின்ற(து) எனப் பொலிந்த பொலன் கழற் காற் பொடி கண்டாய்!
காதல் என் தன் உயிர் மேலும் இச் கரிபோன் பால் உண்டால்!
ஈ(து) இவன் தன் வரலாறும் புய வலியும்!" என உரைத்தான்.

"(ஒரு நாள் மலர்ந்து, மறு நாள் நிலைபா தழியும் இயல்புடையது பூ. அப்படிப்பட்ட) பூவானது நிலைபெற்றதுபோல விளங்காநின்ற, இவருடைய பாத (த்திற்படிந்த அளவற்ற பல தூளிகளுள் ஒரு) தூளியே (சாபவசத்தினால் நெடுங்காலம் கல்லாயிருந்த) அகலிகைக்கு (ச் சாபவிமோசனஞ் செய்து) முந்திய வடிவத்தை அருளிய (மகிமையுடைய) து! (என்றால், அப்படிப்பட்ட பாதத்தின் மகத்துவத்தைக் கூற முடியுமோ! அதுவேகூற முடியாதென்றால், கேவலம் அதமாங்கமேயான அப்பாதத்தோடு உத்தமாங்கம் (—சிரசு)உள்பட மற்றெல்லா அங்கங்களும் அமைந்த முழுத்திருமேனியின் வைபவம் இவ்வளவென்று கூறுவது எங்ஙனம்! (இத்தகைய பெரியாராகிய) இந்தக்கரியார் பால் (எனக்கு) என் உயிர்மேலுள்ளதினும் அதிகமான அன்பு உள்ளது. (யான் இப்போது ஒருவாறு கூறியவாறு) இவ்வளவு பெருமையுடையது இவர் வரலாறு!; இவ்வளவு பெருமையுடையது இவர் புயபலம்!; (என்று தெரிவீராக:)" என்று கூறினார்.

பன்னி-மனைவி. போது—மலர். நின்றது—நிலைத்தது—நிலையானது. பொலன்—பொன்; 'பொலம்' என்பதன் மரூஉ. கழல்—வீரர் காலில் அணியும் ஓர் ஆபரணம். கரிபோன்—கருநிறமுள்ளவன்—இராமன். ஈது—இத்தன்மையுள்ளது; இவ்வளவு பெருமையை யுடையது. "ஈது" (தொகுதி யொருமை) என்றாயினும், 'வரலாறு ஈது' 'புயவலியீது' என்று பிரித்துக்கூறியாயினும் இலக்கண அமைதி செய்து கொள்க.

மேற்கூறிய 'இத்தன்மை உள்ளது' 'இவ்வளவு பெருமையுடையது' என்ற கருத்துக்களை வியப்போடு கூறுமிடங்களில் கம்பர் 'இது' 'ஈது' என்ற சொற்களால் நயம்படக் கூறுவர். 'குலம் இது! கல்வி ஈது!' என்ற வாலிவதைப்படலப் பாட்டையும் 'அறிவும் ஈதே! உருஈதே!' என்ற சுந்தரகாண்டப்பாட்டையும் நோக்குக.

காலிற் பட்டவற்றுள் ஒருதூளே சாபவிமோசனஞ் செய்ததென்று உரைசெய்ததைக் 'கொடுத்தது' என்ற ஒருமைப் பயனிலை வலியுறுத்துதல்காண்க. தூள், துகள், தூளி, தூசி, சுண்ணம், பூழி, பூழ்தி, பொடி என்ற சொற்கள் புழுதி என்ற கூட்டப்பொருளாகிய ஒருபொருள் குறித்தவை. இந்தத்தொகுதிப் பொருளில் ஒருபகுதியை 'ஒருதூளி' யென்றது, புழுதிபோலச் சமுதாயப் பொருளாகிய மணலின் ஒரு பகுதியை "மணல் ஒன்று" என்று "அணிகொண்ட குரங்கினங்கள் அலைகடலுக்(கு) அப் பாலை—மணல் ஒன்று காணுமல் மலையெடுத்து மயங்கினவே." என்ற கலிங்கத்துப் பரணிப்பாட்டிற் கூறப்பட்டது போலக் கூறப்பட்டது. [ஒரு மணலின் சூடேகடலை வற்றச்செய்திருக்குமென்பது குறிப்பு.]

'முன்னையுரு' வென்றது, இந்திரனாற் கற்பழிக்கப்பட்ட பின்னும் கல்லாகு முன்னும் இருந்த இழிவுற்ற வடிவத்தையன்று; (அது கௌதமர் ஏற்றுக்கொள்ளத்தகாததென்று கூறவேண்டுவதின்று) கற்பழிக்கப் படுமுன் கௌதமரது மனைவியாயிருந்த வடிவத்தையுமன்று; (அது புதியதல்லாததனால் இராமர் கௌதமருக்குக் கொடுத்தற்குரியதன்று); மற்றெவ்வடிவத்தை யோவெனின், கௌதமபன்னியாதற்கு முன்னிருந்த கன்னிப்பருவ வடிவத்தையே: என்பது புலப்படுமாறு கம்பர் 'அகலிகைக்கு முன்னையுரு' வென்னுமல் 'கோதமன்றன் பன்னி (ஆனது)க்கு முன்னையுரு' என்றுரென்ற கருத்தை ஸ்ரீ ரா. ராகவையங்கார் அகலிகை வெண்பா. உ-ம் பதிப்பு முகவுரை XXIX-ம் பக்கத்தில் 'முந்த இவள் (அகலிகை) உற்ற உரு முண்டகத்தோன் கைசமைத்த(து,)—இந்த உரு நின் (இராமருடைய) திருத்தாள் ஈந்ததால்;— அந்த உரு—மா(சு) அடைவும் மாய்வும் உற்ற வா(று,) இவ் உரு, என்றும்—ஆ(சு) அடைவும் வீவும் இல(து) ஆம்.' என்ற பாட்டுப் பொருளை விளக்குதற்குப் பீடிகையாகக் கூறியுள்ளார்.

கார்முகப் படலம்.

'இதனை வளைத்தவன் சீதையை அடைவான்' என்று சனகர் வைத்திருந்த வில்லை இராமர் முறித்ததைக் கூறுவது (கார்முகம்—வில்.)

148. மாற்றம் யா(து) உரைப்பது? மாய விற்கு நான்
தோற்ற ஆ(று) எண, மனம் துளங்கு கின்றதால்!
நோற்றனள் நங்கையும் நொய்தின் ஐயன் வில்
ஏற்றுமேல், இடர்க் கடல் ஏற்றும்" என்றனன்.

இ-ள். (இவ்வாறாக, விசுவாமித்திரர்கூற, சனகர் "தேவரீர் 'இவர் வில்லும் சாண்பார்' என்றீர். அதற்கு மறு) மாற்றம் நான் யாது கூறுவது? (இதனை எவரேனும் வளைத்து என் பெண்ணை மணப்பரென்ற என் எண்ணம் நிறைவேறாமற் செய்து என்னைத் தோல்வியடையச் செய்த அந்த) மாயமான வில்லுக்கு நான் தோற்ற விதத்தை நினைக்க என் மனம் நடுங்குகின்றது. (அந்த நடுக்கத்தினால் முன் வளைக்க முயன்றவர்போல இவரும் வளைக்கமாட்டாமற்போவரோ என்ற பயம் உண்டாகின்றது) இவர் (அந்த) வில்லில் (நாண்) ஏற்றுவாரானால் சீதை தவஞ் செய்தவளாவாள்; (அவள் கல்யாண மாகாமையால் வருந்திக்கொண்டிருக்கும் எங்களையெல்லாம்) துன்பக் கடலினின்றும் (இன்பக் கரையில்) ஏற்றினவராவார்." என்றார்.

மாற்றம்—வார்த்தை. மாய வில்—வஞ்சனையையுடைய வில் (மாயப் பொய்—வஞ்சனையை யுடைய பொய். பரிபாடல் இருபதாவதன் உரை.) மாரீசனை மாயமானை 'வஞ்சனைமான்' என உருக்காட்டுபடலம் கஎ-ம் பாட்டிற் கூறுதல்காண்க. அறிவில்லாத வில்லை வஞ்சனையையுடைய வில்லென்று பொருள்பட 'மாயவில்' என்றது அது தோற்றத்தில் மற்ற விற்களைப் போன்று உண்மையில் அவ்விற்கள் போல வளைக்கப்படாதிருந்தமை பற்றியென்க துளங்குதல்—நடுங்குதல். நோற்றனள்—தவஞ் செய்தனள்—பவப்பயனை அடைந்தவள்—புண்ணியவதி, நங்கை—பெண்ணிற் சிறந்தாள். நொய்தின்—இலகுவாக.

வில்லின் வன்மையையும் அவ்வன்மையால் அது இதுவரையும் ஒருவராலும் வளைபடாமையையும் அதனால் நெடுங்காலம் சீதாதேவி கல்யாணமாகாதிருத்தலையும் கருதி மனம் நடுங்குகின்ற சனகர், அவ் வில்லை இராமர் மிகவும் வருந்தியாயினும் வளைத்து நாணேற்றவேண்டுமென்று கூறற்பாலராயிருக்க, 'நோய்தின் (—எளிதாக—வருத்தமின்றி) ஐயன் (—இராமன்) வில்(லைவளைத்து நாண்)ஏற்றுமேல்' என்றது ஆராய்தற்குறியது. 'நொய்தின்' என்ற சொல் நிற்கும் தானத்தில் அது சிறந்த பொருள் பயக்கவில்லையாயினும், அத்தானம் மோனைத் தானமாதலால், பொருட்சிறப்பைப் பிரதானமாகக் கருதாமல் அச் சொல் புணர்க்கப்பட்டதென, ஒருசமாதானம் கூறலாம். பின்வரும் விசேடவுரையைக் கொண்டால், ஒரு சமாதானமும் கூறவேண்டிய ஆவசியகம் இல்லாமற் போதலேயன்றி, அந்த'நொய்தின்' என்ற சொல் மிகச்சிறந்த பொருள் பயக்குமாறு பிரயோகிக்கப்பட்டுள்ளதாகும்.

மேற்குறித்த விசேடவுரையாவது:—சனகர், இராமரைக்கண்டவுடனே மிகுந்த அன்பு பூண்டு விட்டாராதலால், அவர் இராமர்திறத்தில் 'என் பெனக்(கு) உருகு கின்ற(து) இவர் கின்ற(து) அள(வு)இல் காதல்—அன்பினுக்(கு) அவதி இல்லை' (அனுமப்படலம் கரு.)என்ற சிந்தையராய், இராமர் வருந்தி வில் வளைத்தற்கு மனம் சகியாராய் 'நொய்தின் ஐயன் வில் ஏற்று மேல்' என்று ரென்பது.

'நோற்ற பேற்றைப் பெற்றவளாவாள்' என்பதை 'நோற்றனள்' என்றும் 'வில்லை வளைத்து நாணேற்றுமேல்' என்பதை 'வில் ஏற்றுமேல்' என்றும் 'இடர்க் கடலினின்றும் எங்களை இன்பக்கரை யேற்றும்' என்பதை 'இடர்க்கடல் ஏற்றும்' என்றும் பொருள் விளக்கம் சிறிதும் குன்றுமல் சுருங்கக் கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது.

[மேற்கூறியவாறு கூறிச் சனகர் அந்த வில்லைத் தருவித்து இராமரது கம்பீரத் தோற்றத்தையும் வில்லின் வலியினையும் சீதாதேவி கல்யாணமாகா நிலையினையும் சிந்திக்க, அச்சிந்தனையை அவர் முகக்குறியால் சதாநந்தர் அறிந்து விசுவாமித்திரரை நோக்கி, தக்கன் உமாதேவியை அவமதித்தானென்று சிவாமிசரான வீரபத்திரர் இந்த வில்லுடன் அவன் யாகசாலை சேர்ந்து, அவனையும் அவனுக்குத் துணை

யாயிருந்த தேவர்களேயும் சிதைந்தோடச் செய்து, அவன் வேள்வித்தீ ஆறத் தம் கோபத்தீயும் ஆறினர். அப்போது அவர் இந்த வில்லை இந்தச் சனகரது முன்னேரொருவரிடம் வைத்துச் சென்றர். இனி, இவ்வில்லுக்குரியவள் வரலாறும் கேளும்: நாங்கள் யாகம் செய்தற்கு நிலத்தைச் சுத்தப்படுத்தும் பொருட்டு வயிரக் கொழுவையுடைய பொற் சலப்பையினல் உழுதோம்.]

வேறு.

149. உழுகின்ற கொழு முகத்தின், உதிக்கின்ற கதிரின் ஒளி
பொழிகின்ற புவி மடந்தை உரு வெளிப்பட் டெனப், புணரி
எழுகின்ற தெள் அமுதோ(டு) எழுந்தவளும் இழிந்(து) ஒதுங்கித்
தொழுகின்ற நல் நலத்துப் பெண் அரசி தோன்றினள்.

இ-ள். உழுத கொழுவின் முனையிலே, உதய சூரியன் போல ஒளி வீசுகின்ற பூமிதேவியினது உருவம் வெளிப்பட்டாற் போல, கடலில் உண்டாகிய அமுதத்துடன் தோன்றிய இலக்குமி தேவியும் (தன் அழகு) தாழ்வுற்று (நாணி எதிர் நிற்கமாட்டாமல் ஒருபுறம்) ஒதுங்கி (நின்று) வணங்கும்படியான மிக்க அழகுடைய பெண்ணரசி (யாகிய சீதாதேவி) தோன்றினள்.

கொழுமுகம்—கொழுவின் முனை. முகம்—முனை (சங்க அகராதி) உதிக்கின்ற கதிர்—உதயமாகின்ற சூரியன். புணரி—கடல். இழிந்து —இழிவடைந்து—தாழ்ச்சியுற்று. நல்நலம்—நல்ல நலம்—மிக்க அழகு. நன்மை—மிகுதி (சங்க அகராதி) நன்று—பெரிது (புறநானூறு).

உதய சூரியனது ஒளி, செம்பொன்னிறமுடையதாய், (இளவெயி லெனப்பெற்று,) இதமானசூடுடையதாய், இனிதாயிருப்பதால், சுவர்ண நிறமுடைய சீதாதேவியினது திருமேனியின் திவ்விய தேசசுக்குச் சிறந்த உவமானமாயுள்ளது. இப்பாட்டின் பின்னிரண்டடிக் கருத்தை மிக இனிதாக வேருேராற்றல் "தாமரை இருந்தையல் சேடியாம் தரமு மல்லள்" என்று பின்னர்க் கூறுவர்.

150. குணங்களை என் கூறுவது? கொம்பினைச் சேர்ந்(து) அவை உய்யப்
பிணங்குவன! அழ(கு)இவளைத் தவம் செய்து பெற்றது காண்!

கணம் குழையாள் எழுந்ததன் பின் கதிர் வானில் கங்கை எனும்
அணங்(கு)இழியப் பொலி(வு)அழிந்த ஆ(று)ஒத்தார் வே(று)உற்றார்.

இ. - ள். (அவளுடைய நாணம் முதலிய பெண்மைக்) குணங்களை (ப்பற்றி) யாது கூறுவது? அவைகள் (அந்தப்பூங்) கொம்பு போல் வாளை அடைந்து வாழ்வுறுதற்கு ('யான்முந்திக்கொள்வேனாகயான் முந்திக்கொள்வேனாக' என்று ஒன்றோடொன்று) சண்டைசெய்வன வாயின. (ஏனை மாதர் தாம்செய்த தவத்தினால் அழகைப்பெற்றிருக்க,) இவளை அழகு தவஞ்செய்து பெற்றிருக்கின்றது. கங்கையாறு ஆகாயத்தினின்றும் (பூமியின்மேல்) இறங்கி (த்தோன்றி) னவுடனே அழகழிந்த (மற்ற) ஆறுகள் போல, இவள் (பூமிக்குள்ளிருந்து வெளிப் பட்டுப் பூமியின்மேலே) தோன்றினவுடனே ஏனைமாதர்கள் (எல்லாரும் அழகழிந்தவர்) ஆனார்கள்.

என் - யாது. உய்தல் - பிழைத்தல் - வாழ்வுறுதல். பிணங்குதல்- சண்டை செய்தல். காண்-முன்னிலை அசை; 'இதனைத் தெரிந்துகொள் வாயாக' என்னும் பொருளுடையதுமாம். கணம் - திரட்சி (பத்துப் பாட்டு) கணங்குழை - திரட்சியான குண்டலம். கதிர்வான் - ஒளி(யை யுடைய) ஆகாயம். அணங்கு-1. தெய்வப்பெண்; 2. பெண். இழிய- (பூமிமேல் பகீரதன் செய்த தவத்தினால்) இறங்க. பொலிவு-1. அழகு; 2. விளக்கம் - பிரகாசம். வேறு உற்றார் - (சீதைக்கு) வேறாக உற்றார் ஆகிய பெண்கள் - மற்றைய மாதர் (அனைவரும்).

இப்பாட்டின் பின்னிரண்டடிகளில் உள்ள உவமான உவமேயப் பொருத்தம் மிகச் சிறந்தது. ஆறுகளையும் மாதரையும் ஒப்பிடுவது பலவகையிலும் பொருத்தமானது. பூமி தோன்றியகாலமுதலாக உள்ள புராதனமான ஆறுகளெல்லாம் கங்கை ஆறு (முன் இல்லாதது) புதி தாக வந்தவுடனே அதன் பொலிவு மிகுதியல் தம் பொலிவழிந்தது போல, ஆதிமுதல் இதுவரையும் அழகிற்சிறந்தாராயிருந்த மாதரெல்லாம் புதிதாக உண்டாகிய சீதாதேவியின் பேரழகினால் அழகழிந்தாராயின ரென்ற கருத்து மிக்க இன்பம் பயப்பது. சற்றேறக்குறைய இக்கருத் துப்போலவே இப்பாட்டின் முன்னிரண்டடியில் 'கொம்பினைச் சேர்ந்து உய்யக் குணங்கள் பிணங்குவன' என்றும் 'அழகு இவளைத் தவம்

செய்து பெற்றதுகாண்' என்றுங்கூறிய கருத்துக்களும் மிகவும் இனிய வைகளே. இத்தகைய சிறந்த அழகுடைய மூன்று கருத்துக்களைப் பொருத்தமாக ஒருபாட்டில் அமைத்திருக்கும் கவிசாதுரியம் கண்டு களிக்கத்தக்கது. 'அழகிவளைத் தவஞ்செய்து பெற்றது' என்பதனை ஒப்ப வேறோரிடத்தே 'தவம் செய்த தவமாம் தையல்' என்பர்.

["நீரிலே பிறந்த அந்தத் திருமகளை விண்ணரசரெல்லாரும் காத லித்ததுபோல, நிலத்திலே பிறந்த இந்தத் திருமகளை மண்ணரசரெல் லாரும் சாதலித்து மணம் பேசினார்கள். அவர்களுக்கு 'இவ் வில்லை வளைத்தவரே இவளை மணக்கப் பெறுவர்' என்றோம். அவர்கள் வில்லை வளைக்கமாட்டாராய், இவள் காதலையும் விடமாட்டாராய், வலியினால் இவளை அடையக்கருதிப், போர்செய்து தோற்றுப்போனார்கள். பின்பு, இவ்வில்லருகே எவரும் வந்திலர். இனி யெக்காலமும் இவளுக்குக் கல்யாணமில்லை யென்றிருந்தோம். இவர் வளைத்தால், இவள் அழகு பயனற்றுப்போகாது" என்றார். இவ்வாறு சதாநந்தர் கூறியதைகேட்டு, விசுவாமித்திரர் வில்லின் வன்மையைப்பற்றி வியப்படைந்து இராமன் முகத்தைப் பார்த்தார். அப் பார்வையினால் அவர் தம்மை வில்லை வளைக்கும்படி கருதிய குறிப்பறிந்து, இராமர் வில்லை நோக்கி,]

வேறு.

151. பொழிந்த நெய் ஆகுதி வாய் வழி பொங்கி
எழுந்த கொழுங் கனல் என்ன எழுந்தான்:
"அழிந்தது வில்!" என விண்ணவர் ஆர்த்தார்:
மொழிந்தனர் ஆசிகள் முப் பகை வென்றார்.

இ-ள். (ஓமகுண்டத்திலே) சொரிந்த நெய்யாகிய ஆகுதி (வீழ்ந்த) இடத்தினின்று (அந்த நெய் விழுந்த) வழியே ஓங்கி எழும்பு கின்ற (ஓமத்) தீப்போல எழுந்தார்: "அழிந்தது வில்!" என்று தேவர் கள் ஆரவாரித்தார்கள். முனிவர்கள் வாழ்த்தினார்கள்.

வாய் - இடம். ஆர்த்தல் - ஒலித்தல். ஆசி - வாழ்த்து. முப் பகை வென்றார் - முனிவர். முப்பகையாவன காமம், வெகுளி, (-கோபம்) மயக்க மென்பன.

வன்மையுடைய இராமர் எழுதலுக்கு வன்மையுடைய தீ எழுதல் உவமானமாயினும் நன்மையுடைய இராமருக்குத் ("தீயவே தீய பயத்த லால், தீயவை-தீயினும் அஞ்சப்படும்" என்றவாறு) தீமையுடைய தீ ஒவ்வாது -ஒவ்வாதது ஒவ்வுவதாப்படி, தீமையை ஒழிப்பதாய் வன்மை யுடன் நன்மையும் ஒருங்குடையதாயுள்ள ஓமாக்கினியை உவமானமாக உபயோகப்படுத்திய கவிசாதுரியம் உவகைவிளைப்பதாயுள்ளது.

[அவர் அந்த ஒரு வில்லை ஒடிக்குமுன், அவர்மீது காதல் கொள் ளும்படி, மாதர்கள் ஒவ்வொருவர் நெஞ்சினும் அளவிறந்த அம்புகளை எய்து மன்மதன் ஆயிரம் வில்லுகளை ஒடித்தான். "இவர் இந்தவில்லை வளையாராயின், சீதையும் நாமும் தீயில் விழுந்து இறப்போம்" என் பாரும் "இவர் சீதையைக் கல்யாணம் செய்யவிருப்பினால், இவர் கேட்கு முன் 'இவளைக்கொள்வீராக' என்று கொடுப்பதைவிட்டு, (இளமைப்பரு வம் நீங்காத இந்தப்) பிள்ளையார்முன் ஈசனது வில்லையெடுத்துவைத் தது மடமையே" என்பாருமாக, மாதர்கள் பரிந்துபேசாநிற்ப, அவர் சிங்கம்போல அந்த வில்லை நோக்கிச்சென்று, சீதாதேவி தமக்குச்சூட்ட நீட்டிய மாலையைப்போல அதைச் சந்தோஷமாகவும் எளிதாகவும் எடுத் தார்.]

152. தடுத்(து)இமை யாமல் இருந்தவர், தாளின்
மடுத்ததும் நாண் நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினின்; யாரும் அறிந்திலர்; கையால்
எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்!.

இ-ள். (அவர் வில்லை எடுத்தது முதல் நாண் ஏற்றும் வரையும் செய்யும் ஒவ்வொரு செயலையும் இம்மியும் விடாது நுணுகி நோக்கும் இச்சையுடையாராய், இடையே இமைத்தல் செய்தால், இமைத்த சமயத் திலே நிகழ்வது பார்க்க முடியாது தப்பிப்போமென்று, இயற்கையாக இமைக்கும் இமையைச் செயற்கையாக மனமுயற்சியினால்) தடுத்து இமையாமலிருந்தவர்கள் (ஒருவரொழியாமல் எல்லாரும், அவர் வில்லின் ஒரு முனையைக்) காலின் பெருவிரலினால் அழுத்தியதையும் (வில்லை வளைத்து மற்றொரு) முனையில் நாணை (ப் பூட்டுதற்கு) வைத்ததையும் (அச் செயல்கள் செய்யப்பட்ட) வேகத் தினால் (கண்ணினால்) கண்டிலர்; (அவ் எல்லாருள்ளே சிறந்த அறி வாளர்) எவரும் (தாம் இமையாதிருந்தும் அச் செயல்களைக் காணாதபடி செப்படி வித்தைபோல எப்படிச் செய்தாரென்று கருத்தினாலும்) தெரிந்

திலர்; (வில்லைக்) கையால் எடுத்ததைக் கண்டார்கள். ஒடிந்த (சத்தத்) தைக் கேட்டார்கள்! (அவ்வளவே அவர்கள் அறிந்தது.)

தடுத்து—(இமைத்தலைத் தடை செய்து. தாள்—கால்; இங்கே முதலாகு பெயராய்க் காற்பெருவிரலைக் குறித்தது. மடுத்தல்—அழுத்தல் (சங்க அகராதி) அடுத்த அடியில் வரும் 'அறிந்திலர்' போல 'நோக்கிலர்' (—பார்த்திலர்–பார்க்கவில்லை) எனற்பாலது, செய்யுளுக்குப் பொருந்த, 'நோக்கார்' என நின்றது. கடுப்பு—விரைவு. இற்றது—ஒடிந்தது; ஒடிந்ததனால் உண்டாகிய ஓசையைக்குறித்தது.

'தாள்' என்பதற்குச் சில அகராதிகளில் 'விற்குதை' என்றபொருள் உளது. அப் பொருள்கொண்டால், 'தாளின் மடுத்ததும் நாண் நுதி வைத்ததும்' என்றதற்குத் தாளில் (–வில்லின் ஒரு முனையில் உள்ள விற்குதையில்) நாணை (–நாணின் ஒருதலையை) மடுத்ததும் (–சேர்த்ததையும்) நுதி (-மற்றொரு முனையில் வைத்ததும் (–நாணின் மற்றொரு தலையைப்பூட்டுதற்கு வைத்ததையும்) எனப் பொருள்கொள்ளலாம். இப்படலத்தில் 'இரும்பனைய'என்றுதொடங்கும் சகூம்பாட்டில் 'பொற் கலப்பை(யில்) வயிரத்தின் கொழுமடுத்திட்டு' என்பதிலும் 'மடுத்தல்' சேர்த்தலெனப் பொருள்படப் பிரயோகிக்கப்பட்டிருத்தலைக்காண்க.

நாண் பூட்டுதற்குமுன் வில் முறிந்ததைக்குறிக்க 'நாண்பூட்டியது மென்' னாது 'நாண்வைத்தது' என்றார். 'எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்' என்றது கவி சமத்காரத்துக்கோருதாரணமாம் என்பர் (ஸ்ரீ செல்வக்கேசவமுதலியார். (கம்பநாடர் பக்கம் 57–58).

[அந்த ஓசை, சுவர்க்க மத்திய பாதலமென்ற மூன்று லோகங்களிலும் சென் றிடித்தது. இனிச் சீதாகல்யாணம் நிறைவேறினதேயாமென்று எல்லாரும் குதூகலித்தார்கள். ஆடவரினும் பெண்டிர் அதிகமாக மகிழ்ந்தார்கள். சனகராச சபையில் நிகழ்ந்தது இதுவாக, நிலவினாலும் இருளினாலும் வருந்தி நீங்கலுற்ற உயிரை, இராமனைக் காண வேண்டுமென்னும் ஆசை மருந்தினால், சிறிது மீளப்பெற்ற சீதாபிராட்டி படுக்கைவிட்டெழுந்து, பாங்கியர் சூழச்சென்று, கன்னிகா மாடத்தை அடுத்துள்ள ஒரு தாமரைத் தடாகமத்தியில் உள்ள பளிங்கு மாளிகையில் அமைத்த பூ அணையைச் சேர்ந்தார். சேர்ந்தவர் அத்தடாகத்துத் தாமரைகளை நோக்கிக் கூறுகின்றார்.]

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

மதிப்புரை.

திருவள்ளுவர் நூல்நயம்:—இது, ஸ்ரீமான் ஆர். பி. சேதுப்பிள்ளை (பி. ஏ., பி. எல்.) அவர்களால், திருக்குறளைப்பற்றிப நுவலும்பொருள் பலவும் தெளிவாய்விளங்கும்படி ஆராய்ச்சிமுறையான இனிய வுரை நடையி லெழுதப்பட்டிருக்கிறது. இதனை யெழுதிய பிள்ளையவர்களது தமிழ்மொழிவன்மையும், களவியலுரைமுதலிய தமிழ்நூற்பயிற்சியும் பாராட்டற்பாலன. இப்புத்தகத்தைப்பற்றிச் சொல்லத்தக்க சிறந்தன பலவும் ஸ்ரீமான். கா. சுப்பிரமணியபிள்ளை (எம். ஏ.. எம். எல்.) அவர்கள் எழுதிய உயர்ந்த முகவுரையானே நன்கு விளங்கும். இவ்வாறன ஆராய்ச்சிகளே விரைவாகத் தமிழ்கற்பவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கன. இக்காலத்திபல்புபற்றி, நூலுள்ளும், உரையுள்ளும் இடையிடையே நுழைக்கப்பட்டிருக்கும் சில புதியகருத்துக்கள் ஆராயத்தக்கன. இதன் விலை ரூபா 1. வேண்டுவோர் ஸ்ரீமான் எம். இ. வீரபாகுப்பிள்ளையவர்கள், பி. ஏ., 21, தர்மராஜாகோயில்தெரு, சைதாப் பேட்டை, சென்னை என்ற விலாசத்துக் கெழுதிப்பெறலாம்.

ஸ்ரீ ஈசுவரசந்திரவித்தியாசாகரர், ஸ்ரீமான் சேலம் ராமசுவாமி முதலியார்: இவர்களுடைய சரித்திரப்புத்தகங்களும் ஒவ்வொன்று இரண்டணாவீதம் மேற்கண்டவிலாசத்திற் பெறலாம்.

அகநானூறு மூலமும், பழையவுரையும்—இது, அகப்பொருட் டிணைபற்றித்தொகுக்கப்பட்ட சங்கத்தமிழ்நூல்களுளொன்றென்பது யாவரு மறிந்ததே. இந்நூல் இதுகாறும் அச்சிடப்படாதிருந்தகுறை தீருமாறு, ஸேதுஸமஸ்தானவித்வான் ஸ்ரீமத் ரா. ராகவையங்காரவர் களாற்பரிசோதிக்கப்பட்டு, சென்னை மயிலாப்பூர் கம்பர்விலாசம் ஸ்ரீமத் வே. ராஜகோபாலையங்காரவர்களால் அச்சிற்பதிப்பித்து வெளியிட லாயிற்று. அதற்கு அநுபந்தமாக இப்பொழுது நூல்வரலாறு முதலி யனவும், அகப்பொருளைப்பற்றியகருத்துக்களும் பிறவும் விளங்கும்படி ஸேதுஸமஸ்தானவித்வான் ஸ்ரீமத் ரா. ராகவையங்காரவர்களெழுதிய முகவுரையுடன், பாடினோர்வரலாறு, இந்நூலுள் வழங்கப்பட்ட அரசர் முதலியோர் வரலாறு, ஆராய்ச்சிக்குறிப்பு, இலக்கணக்குறிப்பு, பொருட் குறிப்பகராதி, அபிதானக்குறிப்பு முதலியனவும் எழுதி அச்சிட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் தன்னோடொத்த பிறதொகைநூல்கள்

போலச்சிதல்வாய்ப்பட்டுக்குறைபாது முழுதுமுள்ளபொழுதே அச்சிட விரும்பிப் பரிசோதிப்பதற்கும் பணவுதவிபுரிவதற்கும் தக்கோர்களை யடுத்து இப்பெரியகாரியத்தை முடித்த ஸ்ரீமத் வே. ராஜகோபாலை யங்காரவர்களது ஊக்கமும் உழைப்பும் நன்குமதிக்கத்தக்கன. இதன் அநுபந்தத்தின் விலை ரூ 1. முழுப்புத்தகத்தின் விலை ரூ 10. வேண்டு வோர் பதிப்பித்தோர்க்கு எழுதிப் பெறலாம்.

கற்புடையமகள் சாவித்திரி.—இது, கற்புடையமகளிர் ஒழுகும் ஒழுக்கங்களையும், அவரது ஆற்றலையும் சிறுமியருந் தெரிந்தொழுகும்படி, தஞ்சைக் கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் எல். உலகநாதபிள்ளையவர்களால் எளிய தமிழ்நடையிலெழுதப்பட்டதொரு சிறியகதைப்புத்தகம். இதன் விலை அணா. 2. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப் பெறலாம்.

ஆன்றோர்சரித்திரச்சுருக்கம்.—இது, சென்னை ஸி. ஆர். ஸி. ஸெகண்டரிஸ்கூலில் தலைமையுபாத்தியாயராயிருந்த ஸ்ரீமத் எம். வீ. ஈசுவரையரவர்களால், கலாசாலைமாணவர்கள் உபபாடமாகப்படிக்கும்படி எழுதப்பட்ட சிலசரித்திரங்கள் அடங்கிய சிறுபுத்தகம். இதன் விலை அணா. 5, வேண்டுவோர் 55 லிங்கசெட்டிதெரு டெம்பிள் அன்ட் கம்பெனி, சென்னை. என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

பப்புதிம்மபநாயக்கன்:—இது ஸ்ரீமத் சோ. சா. கிருஷ்ணசாமி ஐயரவர்களால் எழுதப்பட்டதொரு கதைப்புத்தகம். இதன் விலை அணா. 4.

கம்பநாடர்.—இது, காரைக்குடியிலிருந்து, ராமாயணப்பிரஸங்கவித் வான் ஸ்ரீமத் மோ. வே. கோவிந்தராஜையங்காரவர்கள் தாம் வடமொழி தென்மொழிகளிற் பன்முறைபயின்றபயிற்சியானுராய்ந்தறிந்த ராமாயண விஷயங்களை முறையாக வெளியிட்டுக்கொண்டுவரும் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதில் 1. கம்பரும் வான்மீகரும்; 2. கம்பராமா யண ஆராய்ச்சி; 3. கம்பராமாயணக்கவி; 4. கம்பராமாயணவசனம் என்ற விஷயங்கள் வெளிவருகின்றன. கற்றோர்களிக்கும் கம்பர்கருத் துக்களை மற்றோருமறிந்து மகிழ்ச்சியடையும்படி வசனநடையிலெழுதி வருதலால் இது எல்லாராலும் ஆதரிக்கத்தக்கதே. இதன் வருடச்சந்தா ரூபா 5. வேண்டுவோர் (இதன் ஆசிரியர்க்கு) கம்பநாடர் கார்யாலயம்; காரைக்குடி; ராமநாதபுரம்ஜில்லா என்ற விலாசம் எழுதிப் பெறலாம்.

நச்சினார்க்கினியன்.—இது, திரிசிரபுரத்தினின்றும் நாஷனல் காலேஜின் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணைய ரவர்களால் மாதாந்தப்பத்திரிகையாக வெளியிடப்பட்டுவருகிறது. இதில் இனிபவியாசங்கள், நாவல், நாடகம், விநோதக்கூற்று, விடுகதை முதலிய பலவிடபங்கள் வெளிவருகின்றன. இதன் வருடச்சந்தா தபாற் கூலியுள்பட ரூபா 2. வேண்டுவோர், பண்டித ம. கோபாலகிருஷ்ணைய ரவர்கள் ;நச்சினார்க்கினியநிலபம் ; 2 ஆணி முத்தம்மாள்தெரு; தெப்பக் குளம் ; திருச்சி. என்ற விலாசமெழுதிப் பெறலாம்.

தமிழ்ஏசு.—இது, மதுரைக்காலேஜின் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் ச. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் பத்திராசிரியராயிருந்து நடத்தி வரும் ஒரு மாதாந்தப்பத்திரிகை. இதன் முதலாவது இதழ் வெளிவந் திருக்கிறது. அதில், பத்திராதிபரின்முன்மொழி, திருஞானசம்பந்தர், அனுபவசங்கீதம், காமந்தகீபநீதிசாரம், வாருசிசரிதம், விடுகதைவினு, சப்பகமாலிகீ, நல்லிசைப்புலவர்கவித்திறம். என்னும் விஷயங்கள் பல பண்டிதர்களால் நன்றுயெழுதப்பட்டுள்ளன. இதன் வருடச்சந்தா ரூ. 2. தனிப்பிரதி அணு 4. வேண்டுவோர் இதன் ஆசிரியர்க்கெழுதிப்பெறலாம்.

லக்ஷ்மீ.-இது, ஒரு மாதப்பத்திரிகையாக ஸ்ரீமத் கே. எஸ். முத் தையா அவர்களால் சென்னையினின்றும் வெளிவருகிறது. இதில் தமிழ்நாடும் தமிழ்மக்களும் முன்னேற்றமடைதற்குவேண்டும் பலவிட யங்களும் யாரும் படித்துணரும்படி தெளிவான தமிழ்நடையிலெழுதப் பட்டுவருமென்று தோன்றுகிறது. இதன்வருடச்சந்தா ரூபா 2. வெளி நாடுகளுக்கு ரூ 2-8-0. வேண்டுவோர் கே. எஸ். முத்தையாகம்பெனி ஸில்க்ஹௌஸ் ; 188 கோவிந்தப்பநாயக்கன் தெரு ; சென்னை. என்ற விலாசத்திற் பெறலாம்.

ஜீவானந்தபோதினி.—இது, தமிழ்மக்களின் அறிவு வளர்ச்சிக் கேற்றபலவிடயங்களுமவெளியிடுதற்குரிய மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. இதற்குத் தமிழ்மொழிவல்லபண்டிதர்களும், அறிஞர்களும் கட்டுரைக ளெழுதலால் நன்கு நடைபெறுமென்று தோன்றுகிறது. இதன் வருடச்சந்தா ரூபா 1. வெளிநாடுகளுக்கு ரூ 1—4—0. வேண்டுவோர் ஜீவானந்தபோதினி ஆபீஸ் நெ. 1-382, சௌக்கார்பேட்டை, சென்னை. என்ற விலாசத்திற் பெறலாம்.

ஆசிரியர்போதினி.—இது, யாழ்ப்பாணத்துத் தமிழாசிரியர்சங்கத்தினின்றும் மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதில் நம் தமிழ்மக்கள் கல்வி, அறிவு, ஆற்றல் முதலியவற்றால் முன்னேற்றமடையும்பொருட்டு, அவர்களைக் கற்பிக்கும் ஆசிரியர் தெரிந்துகொள்ளவேண்டிய பலவிடயங்களும் நன்குயெழுதப்படுகின்றன. இதன் வருடச்சந்தா ரூபா 2. தனிப்பிரதி அணு 4. வேண்டுவோர், "மானேஜர், ஆசிரியர்போதினி, சுன்னாகம், யாழ்ப்பாணம்." என்ற விலாசமெழுதிப் பெறலாம்

ஆத்துமசக்தி:—இது, தமிழ்மக்களின் அறிவு, ஆற்றல், ஒழுக்கம் முதலியவற்றை வளர்த்தற்குரியபலவிடயங்களை வெளியிட்டுவரும் ஒரு மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. இதன்வருடச்சந்தா ரூபா 1. வெளிநாடுகளுக்கு ரூபா 1—4—0 (மணிபார்டர் செய்யவேண்டும்) வேண்டுவோர் ஆத்துமசக்திகாரியாலயம்; புதுச்சேரி என்ற விலாசத்திற் பெறலாம்.

காஸிஅன்வர்பாஷா—இது துருக்கியின் மாஜிமந்திரி காஸி அன்வர்பாஷாவின் சரித்திரச்சுருக்கமென்றும், கிலாபத்பதவியைக் காப்பாற்றிய துருக்கியர்களின் மார்க்கவிசுவாச முதலியவற்றைக்காட்டுவதற்கு எழுதப்பட்டதென்றும் இதன்முகவுரையால் வெளியாகிறது. இதன் விலை அணு 6. வேண்டுவோர் இதனையெழுதிய இ. சே. முகமது இபுராஹீம் அவர்களிடம் மதுரைப்புதுமண்டபம் புத்தகக்கடையிற் பெறலாம்.

பாலர்மித்திரன்.—இலங்கையிலுள்ள இந்துகலாசங்கத்தாரால் வாசகபாடம்படித்து அறிவுதிருந்துதற்குரியபாலர்களுக்கெல்லாம் பயன்படும்படியாக ஒழுக்கமுறைகளையறிவிக்கும் சிறியவியாசங்களும், கதைகளும், வினா, விடைகளும், செய்யுள்களுமடங்கியதாய் மூன்றுமாதத்துக்கு ஒருமுறை புத்தகரூபமாக வெளியிடப்பட்டுவருகிறது; இதன் வருடச்சந்தா ரூபா 1. வெண்டுவோர் "இந்துவிட்டரெரிசொஸைடி செட்டிதெரு கொழும்பு" என்ற விலாசத்திற் பெறலாம்.

பர்த்துருஹரியார்.—இது பர்த்துருஹரிஸுபாஷிதம் என்று வடமொழியிலுள்ள 300 சுலோகங்களுக்கும் சரியான தமிழ்மொழிபெயர்ப்புச்செய்யுளாக எட்டயபுரம் ஸ்ரீமத் கடிகைநமச்சிவாயப்புலவரவர்களால் இயற்றப்பட்டது. இதனால் சிருங்காரம், நீதி, வைராக்கியம் என்னும் விடயங்களைப்பற்றிய பலபகுதிகளினியல்பும், அவற்றின் நன்மை தீமைகளும், அவைபற்றிய அருமையானபலகருத்துக்களும் அறியத்தகும். இதனை அச்சிடுதற்கு ஊக்கி உதவிபுரிந்த திருநெல்வேலிவக்கில் ஸ்ரீமத் கிருஷ்ணஸாமி ஐயரவர்களது ஆர்வமுடைமை பாராட்டத்தக்கது. இதன் விலை அணு 8. வேண்டுவோர் எட்டயபுரம் புலவர் சண்முகம்பிள்ளையவர்களுக்கு எழுதிப் பெறலாம்.

I TO 72 PAGES MISSING IN BOOK

வேறு.

இருந்தகாலையினிறைந்தவேத்தவையிடையிணைமுலையிறுமாப்பத்
திருந்துநூபுரச்சில்லொலிகல்லெனத்திகழுமேகலையார்ப்ப
வருந்தமெல்லிடைவல்லியினெல்கிடவளைக்கரம்புடைவீசி
விருந்துவானவர்க்கூட்டியபேரெழின்மின்னுவிட்டெறித்தோங்க. (15)

விடந்ததும்பியவாளெனக்கணையெனவேலெனப்பானூடே
கிடந்தநீலமாமலரெனப்பரந்திணைக்கெண்டைகளெனத்துள்ளிக்
[illegible]டந்துவார்குழைக்கடைகிழித்தாடவர்கருத்தையும்பறித்தோடி
[illegible]டந்துமீண்டகண்ணிரண்டுமேயனங்கவேணடத்தியதுதென்ன. (16)

வடிவின்மேற்புனைசெயற்கையாலியற்கையாம்வனப்பினான்மதிப்பின்றிப்
பிடியிலோதிமப்பெடையெனமிளிருமோர்பெருமிதநடையாளா
யடியில்யாவரும்வீழ்வபோன்மயல்கொளவரும்புன்னகையாளாய்க்
கொடிகுலாயமின்படர்ந்தபோலுருவசிகுறுகினாளவ்வேலை. (17)

வழிந்ததேனிகர்மொழியினாள்வரவினைவல்லைவல்லையினன்றாய்ச்
சுழிந்துவானவர்பன்முறைநோக்கினர்தொன்முறையிலளென்னாப்
பிழிந்துகொள்வபோல்விளங்கியசுந்தரப்பெண்மையிலுயர்காட்சிக்
கொழுந்தினுட்கிடைக்குறிப்பையும்பொருக்கெனக்குறித்தனன்முகிலூர்தி.()

முனிவர்தேவர்கண்மனனுகர்குறுநகைமுகிழ்முலைமதர்வேற்கட்
கனிவுசேரெழிற்காமமீதூர்ந்தவெங்கதிநடைப்பிடிபோல்வா
யினிதில்யாவனைத்தழுவுவான்வந்தனையென்றுவாசவன்கூறக்
குனிதலைக்கொடுவெள்கியும்வெள்கிலாள்கூறும்வேட்கையின்மிக்காள். (19)

நினைத்துநாடினளாடவர்திலகனைநெஞ்சினுட்குறிக்கொண்டு
நனைத்தகாதலிற்கவிதையாய்ப்புரூரவநாமவேலிறைதன்னை
யினித்தசொல்லினாற்புகன்றனள்புகறலுமிமையவர்நகைத்தெள்ளி
மனித்தனேயவன்றேவர்பானலத்தையென்மதித்திடாதிகழ்ந்தாய்நீ. (20)

என்னக்கேட்டிவளென்செய்தாளெனச்சினந்திந்திரனிமைநீத்துப்
பன்னக்கீழ்ப்படுமானிடனொருவனைப்பாவைநீமனமோடி
நன்னர்க்காதலித்தியாதுகாரணத்தினோவின்றனையதனாலே
யுன்னைக்காண்டலும்பாவமாம்விரைந்துபாருலகிடைப்போவென்றான். (21)

இந்திரன்செயுஞ்சாபமுமிமையவரிகழ்ச்சியும்பிடித்துந்தப்
புந்தியோழ்படக்கீழ்ப்படுமனத்தளாய்ப்புலம்பியொன்றுரைக்கின்றாள்
மைந்தினாற்றெய்வவலியினாலென்னுடைவல்வினைத்தொடர்பாலே
யிந்தகேடுறப்புகர்ந்தவென்றீமொழிதேவர்கோன்பொறுக்கென்னா. (22)

அடியில்வீழ்ந்தனளாற்றவும்புலம்பினளழுதனளடியாட்குக்
கொடியசாபமிட்டாயடிகேளினிக்கூறுமிச்சாபத்தின்
முடிவுகூறுகவாறுகவென்னிடைமுனிவறக்கடைக்கண்ணு
லொடிவில்பேரருள்செய்கவென்றிரந்தனளுருப்பசிகரங்கூப்பி. (23)

இரந்துநிற்றலுமிமையவர்யாவருமிரங்கினரவரோடும்
புரந்தரன்றனதுள்ளமன்புறுத்திடப்பூவைகேளினிப்போந்து
துரந்தவாறடைந்தொல்லைமீண்டென்னிடைத்தொல்லைபோலடைகிற்பா
யரந்தைகூர்ந்திடேலென்றருள்புரிந்தனனவையுளார்செவிகேட்ப. (24)

அண்டவாணர்கள்போக்கலுமவையொரீஇயக்கணங்கலைத்திங்கண்
மண்டிலம்புவியிழுக்கிவீழ்ந்தென்னவான்வழுக்கினள்வழிக்கொள்ளாக்
கெண்டையங்கணுண்மணித்தரில்லாததோர்கிடக்கையாம்வனத்தின்கட்
சண்டமாருதமுரித்தபூங்கொம்பெனத்தளர்ந்துவீழ்ந்தனளன்றே. (25)

செய்யசம்படமுடற்பொதிந்தசோகிளஞ்செழுந்தளிர்க்கொம்பென்னக்
கையணைக்கொடுசயனபாரிசத்தளாய்க்கவிகயக்கியதாராய்ப்
பையராமுடிப்பார்மகண்மார்பிடைப்படலையாய்விளங்கின்று
ளையகற்பகமெல்லிதழ்வல்லரியலர்ந்தனநலந்தோன்ற. (26)

போர்த்தசெந்துகிற்படாத்தினுண்மறைந்திடைபுடைத்தமெய்யுறுப்பெல்லா
மார்த்தலர்ந்தபூங்கற்பவல்லரியிடையரும்புகண்முளைத்தென்னப்
பார்த்துளங்கியின்னிலையளாய்ப்பிரிவிடைப்பரிவுசூழ்மனத்தாலே
தீர்த்தினம்பிரிதனிப்பிணைமானெனத்தியங்கினண்மயங்குங்கால். (27)

வேறு.

புணைகவிழ்மீகான்போலப்புலம்புறீஇவருத்தந்தன்னாற்
கணையுறைபுகுந்தாலென்னக்கண்முகிழ்த்தயர்தலோடும்
பணைநெடுந்தோளிதன்னைப்பார்மகடரிக்கத்தானுந்
துணையிருப்பவள்போற்சேர்ந்தாடியிலெனுந்தெய்வமங்கை. (28)

கண்படைவளருமாதின்கனவிடைக்கருணைகூர்ந்து
நண்பினோர்புருடன்போலநண்ணுபுநளினக்கண்ணன்
மண்படக்கிடந்துசோகவாரியிற்றுயில்வாடன்னை
யெண்படமுன்னநோக்கியின்னணமுரைக்கலுற்றான். (29)

தெய்வவான்கொடியேகாமச்செவ்வியின்மதர்த்தநல்லா
யைவகைப்புலனுமொன்றவாதரித்தெமைச்சிந்தித்து
நைவதெற்றாலோதுன்பநலிந்தமேலஞ்சேலஞ்சேன்
மைவரித்தடங்கணின்னைவாழ்விக்கும்பொருட்டினாலே. (30)

ஈண்டையேவைகையென்னுமிருநதிக்கரையின்பாங்கர்க்
காண்டகுகதம்பகானத்தருகுறக்கதிர்விமானத்
தேண்டகுசனகராதியிருடியர்பிறரும்போற்ற
வாண்டுபேந்திரனும்யாமேயமர்ந்தினிதிருக்கின்றேமால். (31)

நின்னிளநலத்தின்செல்வநேர்ந்தெமக்கன்பர்க்கன்பா
மன்னவனொருவற்சேர்ந்துமகிழ்ந்துபல்போகந்துய்த்துப்
பின்னர்வான்பதவிவீடுபேற்றொடுமடைவாயென்னச்
சொன்னபோதிவன்வியூகசுந்தரனாகுமென்னா. (32)

புனையிழையவள்புராணபுருடவுத்தமனைப்போற்றிக்
கனவிடைக்கண்டுசிந்தைக்கவலைதீர்ந்துவகைகூர்ந்து
நனவுடனெழுந்தாளந்தஞான்றுமாவேட்டைதேர்வா
னனிகநாற்றிசையுஞ்சூழப்புரூரவனடைந்தானங்கண். (33)

அவ்வனத்திடையேநின்றவாயிதழ்ப்பானலுண்கட்
கொவ்வைவாய்த்தெய்வமாதைக்கண்டனன்குவவுத்தோளா
னவ்வியுங்கவரிமானுநாம்பெறப்பொருப்பும்வேயு
மிவ்விடைக்கொடியுங்கண்டாம்வேட்டையொன்றிதன்மேலுண்டோ. (34)

போதுகொல்விசும்புகொல்லோபொருப்பகங்கொல்லோசேக்கை
யாதுகொலறிகிலேமாலிருநிலத்தியங்கலானுங்
காதுகொள்குழைமேற்பாயுங்கண்ணிமைப்பானும்பாரின்
மாதுகொலெனினுநெஞ்சமயங்குமேமாலைசாந்தால். (35)

என்றிவைதன்னிலுன்னியேந்திழையருகிலெய்தி
நின்றுநீயாரையாதுநின்குலமரபும்யாவ
துன்றிருப்பெயர்நீயாண்டையுள்ளவள்யாருமில்லாப்
புன்றரைக்கிடப்பதென்னைபோந்தகாரணமிங்கென்னே. (36)

துன்புறுமுகத்தளாகியுயிருள்ளுஞ்சோகங்கூர்ந்த
தென்புகல்வில்விநல்லாயென்றிவைவேந்தன்கூறப்
பொன்புரைபொம்மற்கொங்கைபுளகெழவளவையில்லா
வன்புருவாகியின்புற்றறிவையுந்தெரியச்சொல்வாள். (37)

போயதோர்முந்தைநாளிற்பொன்னுலகிருக்கைப்புத்தேண்
மேயவேத்தவையிலெய்திமிகுமதர்ப்பொடுநின்றேனை
யாயிரங்கண்ணனோக்கியாடவர்தம்மில்யார்மேற்
சேயிழையுனக்குவேட்கைசெப்பெனப்புகறலோடும். (38)

தேவரையிகழ்ந்துநீத்துச்சிற்றறிவுற்றுநானு
மோவரும்புருடர்யார்க்குமுத்தமன்புரூரவப்பேர்க்
காவலனவன்மேற்பொங்குங்காதல்கூர்ந்துடையேனென்ன
வாவயின்முனிந்தான்வானோரவைநடுவிருந்தகோமான். (39)

அண்ணல்வெஞ்சாபந்தன்னாலமரர்நாட்டமர்தலின்றி
மண்ணிடையடைந்தேனென்பேருருப்பசியென்பர்வானோ
ரெண்ணுடைவேந்தர்வேந்தேயென்மனங்கவர்ந்தாயென்றன்
கண்ணினுக்கினியகாட்சிக்காளைநீயாரையந்தோ. (40)

ஆற்றவுமுன்னைக்காணிலதிசயம்விளைவதென்னே
மாற்றமொன்றுரைத்தியென்றுமதர்விழிமதுரவார்த்தை
சாற்றலுஞ்செவிக்கின்புற்றேன்றையலேநானுஞ்சோமன்
போற்றியபேரனென்பேர்புரூரவாவென்பர்மன்னே. (41)

மாதர்நீயெனதுகாதன்மன்னுயிராகியென்பா
லாதரித்துறைதல்வேண்டுமெனங்கனலைப்புண்பேற்கித்
தாதுலாம்பொழிற்கணின்பந்தழைத்திடக்கூடல்வேண்டும்
போதுகென்றிரங்தோர்சூழற்புணர்ந்தனன்மணந்துகூடி. (42)

புடவியில்வானிற்கிட்டாப்போகங்கள்பலவுமீட்டு
மடவரற்பெதைமாதர்மணியைக்கண்மணிபோலேந்தி
விடலரும்வேட்கையென்னும்வெள்ளமீதூர்ந்தவேந்தன்
கடிநகர்க்கொண்டுபுக்கான்கடவுளர்கோமானென்ன. (43)

சிறந்தவிண்ணிழிவிமானசேகரன்கூடற்கோயி
லுறைந்தவன்கமலைகேள்வன்சன்னிதிக்கொருசாராகப்
புறந்தனிற்சமைத்ததெய்வப்புதுமணிக்கோயில்வைகி
நிறைந்தபேரின்பமூழ்கியவளொடுநிருபன்வாழ்ந்தான். (44)

நித்தலுந்தெய்வச்சுத்தநிருத்தம்பல்லியத்தின்மல்குஞ்
சித்திரப்பாடற்கேற்பசெய்துமாதவனைப்போற்றிக்
கொத்தலர்குழலினாளுமருச்சனைகுயின்றுநன்கிற்
பததியின்வழிபட்டாளப்பார்த்திவனிச்சைகொண்டே. (45)

சிலபகல்கழிந்தபின்னர்த்தீர்ந்தனள்சாபமீண்டை
யுலகொரீஇச்சுவர்க்கஞ்சேர்ந்தாளுருப்பசியென்னுந்தேவி
நலனுகர்புரூரவாவுஞானயோகத்தின்சார்பான்
மலர்மகள்கொழுநற்போற்றிவைகுந்தமடைந்தானன்றே. (46)

நாரதமுனிவனென்பானுரணன்புகழ்ச்சிநாமச்
சீரினையிவ்வாறென்றுசெப்பினனியாவரேனும்
யாரொருமனிதரிந்தவியத்கதையுணரப்பெற்றார்
காரணத்தவரேபாவமனைத்தையுங்கடக்கவல்லார். (47)

அனிச்சையாற்பகவனுமமசாமிளனென்போன்றானுந்
தனிச்சபோதுரைத்திட்டன்றேசார்ந்தனன்றிருமால்பாத
மனச்செயலுணர்வாற்சாற்றின்மால்பதமடையார்யாரே
யினிச்சொல்வதெவனோநாளுமிடைவிடாப்பத்தியோர்க்கே. (48)

அவமெலாந்தவமாய்ப்பாவமடங்கலுஞ்சுகிர்தமாகிப்
பவமிலாப்பிரமத்தூடேபடிதலுமவர்க்கேயன்றே
வுவமைதீர்புரூரவாவுமுருப்பசியென்பாடானு
நவமுறுங்கதையீதொன்றைநானிலத்தியாவனேனும். (49)

ஒருவனுக்கொருவன்கூறவவனும்வேறொருவற்கோதத்
தெரிபவனவனுங்காமஞ்சிறந்தபல்போகமெல்லா
மருவுவன்மருவிப்பின்னர்மற்றதைத்துடைத்துப்போக்கிப்
பொருவில்வீடடைவனம்மாவுருவசிபுரூரவன்போல். (50)

முதலாவது உருவசிசாபநீங்குபடலம் முற்றும்.

ஆகக்கவி—581.

இரண்டாவது:

மலயத்துவசன்முதலாயினோர் பூசித்தபடலம்.

———o———

கார்வளருமெய்க்கடவுள்கூடனகரிற்குரிய
காவலன்மதிக்குலமெலாம்
பேர்வளரவுற்றதோர்புரூரவனுருப்பசி
பிராணபதமொத்துவளர்நா
ளேர்வளருமர்ச்சனையின்மாலருள்படைத்தகதை
யீதுமலயத்துவசனுஞ்
சீர்வழுதிபத்திசெய்துசோலைமலையுற்றகதை
சேறிடவுரைத்துமினிமேல். (1)

மந்திரத்தினுண்மையறிவீரதிபவித்திரசன்
மாட்சியிவணற்புதமரோ
சந்திரற்குநன்மைதருபேரன்வழியிற்சரிதை
சாற்றுவன்மடக்கிவினவீ
ரந்தரத்திவண்மைகொள்புரூரவனளித்தமக
னுக்கமடன்முற்றுமுடையோ
னிந்திரத்துயிம்பினனன்ஞன்மகனிதிக்கிறையு
மேத்துமலயத்துவசனே. (2)

ஆயமலயத்துவசநாமவழுதிக்குரிசி
லாயிரமொடெட்டுமுடிசேர்
தூயமலையுட்படுதராபதிகடெற்கிலுறை
சூரர்திசையெட்டிலுறைவோர்
தேயமுழுதிற்குமெழுசேனைகள்பரப்பியெதிர்
சீறினவரைப்பொடிசெய்தே
போயவனிகட்டிவடமேருவரையிற்றனது
பேரெழுதிவைத்தபுகழோன். (3)

வைத்தகுறிவானவருமுய்த்துணரவேபின்மது
ரைப்பதியின்மேவிமரபாம
வித்தகபுராதனவகத்தியரைநாளும்விர
விப்பரவிமேன்மதிஞரோ
டொத்துறையுமாயிரசம்வற்சரமதூடொரு
தினத்திலொருகாலொருமையாய்
முத்தமிழ்சொன்மாமுனிமுகத்தினெதிர்நாடினன்
முனித்தலைவகேளிதெனவே. (4)

காமகமெனுப்பெயர்விமானமதையின்றெனது
காதல்கணிரம்பவருண்மோ
நீமனமிரங்கியெனும்வேலையின்மகிழ்ந்துமுனி
நேயமுடனங்கதுதரச்
சோமகுலபுங்கவன்விமானமதையுந்தியதி
தூரமுளகங்கைகடலோ
டேமமுறுசங்கமதின்மூழ்கினனுடன்கயையி
லேகினனடைந்துபடியா. (5)

மாதினுடனங்குளகதாதரனையுங்கயையின்
மாதவனையும்பரவியே
வேதியர்விளங்குமுனிவோர்பரமதொண்டரிடை
மேவியவர்தங்கண்முகமா
யாதியையவணங்கினனநேகதருமங்கள்செய்
தியானமதையுந்தியுடனே
போதகரொடுங்கடிதுகூடலின்வளம்பதியொர்
போதொடுபுகுந்தனனரோ. (6)

நித்தலுமிவ்வாறவன்வழிப்படுதலாயின
னெறிக்கொளுமநாளிலொருநா
ளத்தனிடபாசலதலத்திவன்விமானநிழ
லக்கிரமமாகவிழலு
நத்தர்கணநாதர்கள்பிடித்தனர்பொருததை
நபத்திடைசுலாவிவிடவே
மெய்த்தலைவனனவனுமெய்த்தலைவதாயினன்
விடுத்தயலிலோடவரிதாய். (7)

வேறு.

யானந்தகைந்துமறியும்பொழுதங்கணெங்கோன்
வானந்தகைந்தவுருவாகிமறைந்துநின்று
தானந்தகைந்தபுயல்வாய்த்தனிதங்களென்னத்
தேனுந்துசெஞ்சொற்றிருவாக்கிவைசெப்புமன்றே. (8)

வினவாய்மலயத்துவசப்பெயர்வேந்தர்வேந்தே
வனவார்கழனமணிமஞ்சிரநூபுரத்தி
லினிதாய்ப்பிறந்துநதிகோடிகட்கேற்றமாகித்
துனியாயகஞ்சைப்புனற்குஞ்சிறந்தியாணர்தோன்ற. (9)

ஒப்பின்றியிந்தவிடபாசலத்தூடுபோழ்ந்து
செப்பொன்றுகொங்கைச்செழுங்கங்கைதிரண்டுவெள்ளக்
கொப்பின்பரந்துவருகின்றனள்கோடிசென்மத்
துப்பின்பவமுந்தொலையும்படிவல்லைதோய்தி. (10)

நந்தம்பதத்துற்பவமாய்நமக்கின்பநல்கி
யுந்தும்படிநம்மடியார்க்குறுபோகமீந்து
முந்துந்திரிவிக்கிரமத்திலெம்பாதமொய்ம்பா
லுந்துந்தடுத்தம்புயத்தண்ணல்குடங்கராட்ட, (11)

நாகாலயத்தம்புயனெம்பதத்தாட்டுநன்னீர்
பாகாய்வழிந்துதரும்பரந்தன்னதோற்றத்
தாகாயகங்கைபெயராத்திரிபதகையாகி
யேகார்னவமாய்வருகின்றனளென்பமாதோ. (12)

நாளுமூன்றுபுவனத்தினர்நண்ணுபாவ
நோனாதுசிந்துமிவடன்னெறில்வேகமாற்றி
யானாதசூலப்படையண்ணலமலனாகத்
தானாதரித்துத்தரித்தான்சடைக்காட்டின்மன்னோ. (13)

அத்தன்மையாய்நம்பதம்பூண்சிலம்பாறுமாகி
யெத்தன்மையோர்க்கும்பசுபக்கியெனச்சொல்பேதக்
கொத்தின்னுயிர்க்கும்பதமுத்துகொடுக்குமிந்தப்
புத்தின்னமுதப்புனலூட்புருந்தாடிநீயும். (14)

அன்பாயினர்முன்கொடுநம்மைபடைந்துபூசித்
தின்பாயெமதம்புயப்பாதமிரண்டுமேத்தி
நன்பாவனையெய்துமுயற்சிநடாத்துகிற்பாய்
மின்பாய்திசையெட்டினும்விட்டுவிளங்குவேலோய். (15)

தருமக்கடவுளெனைப்போற்றிடச்சார்ந்தநாளி
னிருமித்துளசோமவிமானநிகேதனத்தின்
மருமத்துவைகியிருக்கின்றனமண்படைத்த
பிரமப்பெயரோன்பெருநாட்பெருவாழ்வுகாறும். (16)

காலங்கடோறும்பலகோடியகாவன்மன்னர்
காலங்களோடும்புரிவார்நமைப்பூசைசாலச்
சீலங்குறித்தெம்மடியாரடித்தொண்டுசெய்ய
மேலங்கமர்வோயிவணீயிருந்தின்பமேவி. (17)

ஈட்டும்பெருஞ்செல்வமெல்லாந்திளைத்தெஞ்சுமீற்றில்
வீட்டின்பமெம்மில்விளைவாயிதற்கையமில்லை
நாட்டஞ்செயிவ்வாறெனநாரணமூர்த்திகூறக்
கேட்டன்புகொண்டுகிடைபாப்பொருள்கண்டதொத்தான். (18)

நிலையத்திலாங்கணிலவுஞ்சிலம்பாற்றின்மூழ்கி
விலையற்றபொன்னான்மணியாற்புதுக்கோயில்வேய்ந்து
சிலையிற்பொலியுமிடபாசலத்தெய்வமாலை
மலையத்துவசன்வழிபட்டனன்வைகலெல்லாம். (19)

வேறு.

சுந்தரவாரிதிதிருவுக்கிறைதிருச்சேர்மணிமார்பன்சுந்தரேசன்
கந்தரஞ்சூழ்வனசயிலமுடையான்சுந்தரத்தோளன்கருதுந்தொண்டர்
தந்துயரந்தீர்க்கவல்லான்சவுமியநாயகன்பரமசாமிபூமி
வந்தமலையலங்காரன்மலைக்கரசுதெய்வசிகாமணிநாமத்தோன். (20)

நம்மைவழிபடுமலயத்துவசனெனுந்தனிவேந்தேநளிநீர்வையைச்
செம்மைநதித்தென்கரையிற்சிறந்ததொருவியன்றலத்திற்றேவர்நாட்டுக்
கம்மியனாற்செய்தமைத்தகதிர்மணிவிமானமதன்கண்ணேநண்ணி
மும்மையுலகமும்போற்றவுறைந்தனமாலாங்கனமுமுன்னியேகி. (21)

இனிமையுறுமுபசாரத்தேற்றமாய்நமையருச்சித்தென்றும்வேத
முனிவரருமறையவருமெமதடியார்களுமெம்மைமுறைபூசிக்கும்
புனிதர்களுமாங்கிருப்பரவரோடுமுனதுசெல்வப்பொருள்கடன்னா
னனிமுயற்சிசெய்துவழிபடுதியெனவெதிர்தோன்றிநவின்றானன்றே. (22)

மாயிருஞ்சோலையின்மலிந்துமதிதவழவுயர்ந்தவிடைமலைமேல்வாழு
மாயிரஞ்சொற்றிருநாமத்தணியழகன்பணிதலைக்கொண்டவ்வாறுங்கே
போயிருந்துதென்கூடலழகியமாலடிக்கமலம்போற்றிவையந்
தாயிருந்துதலையளித்தமகப்போலக்காத்தளித்தான்றமிழ்நர்கோமான். (23)

பிறந்துளசந்திரகேதுப்பெயர்மகற்குமுடிசூட்டிப்பெருநீர்ஞாலஞ்
சிறந்துபுரிசெங்கோன்மைத்திருவமெலாங்கைக்கொடுத்துத்தெளிந்தோனாகித்
துறந்துதவநிலைபூண்டுதுடங்குவினைமுற்றியபின்சூழுமேல்வை
மறந்துமினிப்பிறவாதவான்கதிபுக்கினிதிருந்தான்வாழியிப்பால். (24)

பொன்மலையிற்பெயரெழுதிவழுதியர்க்குப்புகழினொடுபொருளையீட்டுந்
தொன்மலயத்துவசன்மகன்சந்திரகேதவன்றவம்போற்றோன்றுந்தோன்றல்
வின்மலிபூண்புனைசோமசுந்தரனுமவனிடபவெற்பின்மேவி
நன்மகவேட்டரியைநினைந்தருச்சனைசெய்தான்சருகுநாளுந்தின்றே. (25)

நலந்தருவானிடபவரைநாயகன்கேசவன்றுரிதநாசன்றேசன்
நிலந்தருசீர்ப்பாண்டியன்முனின்றுரைப்பான்வெளிப்பட்டாநினக்குத் தூயோ
பலந்தழுவுமுனதுதவமுவந்தனமென்றருளுதலுப்பயிலுமங்நாண் [ய்
மலர்ந்தபனிவரைச்சாரலிருந்துமையாள்கொழுநனங்கண்வந்தானன்றே. (26)

வேறு.

அமையாவன்பினுங்குறுமீசன்றனைநோக்கி
நமையாள்செங்கண்மாலழகன்றானவில்கின்றா
னுமையாளோடியாதுபொருட்டாலுயர்வென்றி
யிமையாமுக்கட்சூலதராநீயிவண்வந்தாய். (27)

யாங்கேசெல்வாயென்னிடைசொல்வாயெனலோடும்
காங்கேயன்றன்றாதையுமாழிக்கடல்வண்ணு
வாங்கேநின்னைக்காண்பதுகருதியடைகின்ற
பாங்கேனென்மீதுன்னருணண்ணும்படிசெய்வாய். (28)

வானோர்சூடாமணியேபணியாய்விடையென்னத்
தேனுர்கொன்றைச்செஞ்சடையீசன்சிலவாழ்த்தி
யானுவன்பானீங்குதலெண்ணுமதுபோழ்திற்
ருனேரில்லான்றன்புடைசுட்டித்தனிகாட்டி. (29)

திகழுஞ்சோமசுந்தரனென்னுந்தேர்வேந்தன்
புகழின்மிக்கானீங்கிவனுக்குப்புகழெய்து
மகவின்பான்மைசெய்குநையாகின்மகிழ்வெல்லா
நிகழுவண்ணமென்னிடையன்புநீசெய்தி. (30)

என்றிம்மாற்றஞ்சுந்தரநாமத்திறைகூற
நன்றுன்வாய்மைப்பேரருள்யானேநணுகிற்கேன்
குன்றின்மாலேயென்றுபராவிக்குறைநேர்ந்து
துன்றும்வேணியண்ணலுமொன்றுசூழ்கின்றான். (31)

வேறு.

தன்னைநாளும்விட்டகன்றிடாவிருப்புடைத்தடங்கட்
பொன்னைவெண்பனிக்குன்றிலேபூத்தபைங்கொடியை
மின்னைநேரிடையின்னுயிர்த்துணைவியைவிரவிப்
பின்னையன்பொடுநோக்கினனின்னணம்பேசும். (32)

மாதர்முற்றெழின்மடந்தைகேள்வருந்திமாதவத்தா
லாதரித்தவிப்புரவலன்புதல்வியாயணுகிச்
சூதிளைத்தமும்முலையொடுந்தோன்றுதியென்னு
வீதுரைத்தலுந்தன்றுணைபணித்தவாறிசைந்தாள். (33)

அன்னகாலையிலறந்தலைபெடுப்பவாரணநூல்
சொன்னதேவருமுனிவருமலர்மழைசொரியத்
தென்னர்சேகரன்செய்தமாதவப்பயன்றிருந்தக்
கன்னியாயவதரித்துமையிருத்தலுங்களித்தான். (34)

மலயமால்வரைநாடனுக்கருண்மகப்பேற்றி
னலகிலாதரம்பிறந்ததவ்வாதரத்தினளாய்
நிலவுநாண்மதிக்கலையெனநாட்குநாணிரம்பிக்
கலவமாமயில்வளர்ந்தனள்கலைபலவுணர்ந்தே. (35)

அகவைவாய்ந்தநல்லுருவமும்பருவமுமமைந்து
மகவைவேந்தனுந்தேவியுங்கண்டுளமகிழத்
தகவுமும்முலைத்தடாதகையெனும்பெயர்தாங்கிப்
பகைவர்வென்னிடப்பாண்டிமாமகள்பயின்றிருந்தாள். (36)

கயிலைநாயகன்மீண்டுதன்றேவியைக்காணூ
வயிலைநேர்விழிமாதர்நீயிப்புவிக்கரசாய்
வெயில்குலாயவேற்றானைநாற்படைக்கடல்விரித்துப்
பயிலுமாழியொன்றுருட்டுதிதிசையெலாம்பரவ. (37)

விந்தமால்வரைநாட்டில்யாமேற்படுமொருசார்
முந்துவேடர்மாளிகையிலோர்வேடர்கோன்முயன்று
சிந்துநாண்மலர்ப்பூசனைசில்பகலுவந்து
மைந்தினேடுவீற்றிருத்துமான்மதிமுசத்தணங்கே. (38)

அங்குநீயெழுந்தடற்படைநாற்கடலார்ப்பப்
பொங்குதெம்முனைபொருதடல்வாகைமேற்புனைவான்
செங்கைவில்லொடுந்தலைப்படும்போழ்தில்யாஞ்சென்று
துங்கவெஞ்சமர்நின்னொடும்புரிகுவந்தொடர்ந்தே. (39)

செருவிலெம்மையும்வென்றிகொள்பவளெனச்சினந்து
வருவைநாமெதிர்நோக்கலுமொருதனமறையு
முருவவோடரிக்கடைக்கயலுண்கணுமெம்மைப்
பரிவினேக்கிநாணடைகுவாய்மடநடைப்பாவாய். (40)

தலைவனுகெனநம்மைநீவரித்தபின்சார்ந்து
நிலவுநின்னகர்தன்னில்யாங்கடிமணநேரக்
குலவுநன்னலனுகர்தியாலெமதுதோட்குவட்டிற்
சுலவுநீர்க்கடல்சூழ்புவிப்பொறையெலாஞ்சுமத்தி. (41)

சுந்தரப்பெயர்வழுதியென்றியாவருந்துதிப்ப
வந்தளித்தயாஞ்சவுந்தரமாயனைக்காண்பான்
கந்தரத்தெழில்வனகிரிக்கெய்திமால்களிப்பப்
புந்திவைப்பினுலுறைகுவாமத்தகைப்பொருப்பின். (42)

உடற்பொலிந்ததோர்கலையினுலுலகெலாமுணர
வடற்பெரும்படைக்கேத்திரபாலனென்றழகற்
கிடப்புறந்தனிலிருக்குநாமிடபமால்வரையான்
றடப்பெரும்பதிபுரப்பதாலப்பெயர்தரித்தே. (43)

விண்ணுளோர்தொழமேருமால்வரையினும்விளங்கு
மண்ணன்மாலிருஞ்சோலையாம்வரையிடத்தமரா
நண்ணுமானிடர்நமதடித்தொண்டராயடைவோர்க்
கெண்ணுபோகங்கள்யாவையும்வழங்குவாமெளிதின். (44)

என்னநாயகனிசைத்தவாறியற்றிஞளிப்பா
லன்னகாலையின்மணிமுடிபுனைந்தவட்பயந்த
மன்னன்வானுலசடைந்தனன்மண்ணுலகனைத்துங்
கன்னியாண்டனளென்பராற்கற்றுநூலுணர்ந்தோர். (45)

உம்பர்மேற்றொடவோங்குசீர்வனகிரியுறையு
நம்பிமாட்டுமன்பினுலருச்சனைநடாத்தி
யிம்பர்போற்றியகூடன்மாதவனையுமிறைஞ்சித்
தம்பிராட்டியாந்தடாதகைவைகலுந்தரித்தாள். (46)

இன்னவாறிஃதிசைத்தனமினியெதிர்காலம்
பின்னைநாயகனருண்மறைப்பேறநள்பெற்றி
தன்னையெம்முறைவினுயினேனம்முறைதவத்தான்
முன்னுபுண்ணியவிருடிகாண்மொழிவனென்றுரைப்பான். (47)

இரண்டாவது மலயத்துவசன்முதலாயினேர் பூசித்தபடலம் முற்றும்.

ஆகக்கவி — 628.

மூன்ருவது:

பட்டாசிரியர் மதுரைகாண்படலம்.

மதிகுலேசன்மலயத்துவசனே
முதலினேர்கதையீதினிமூதுணர்
புதுவைமாநகர்ப்பூசுரன்கூடலம்
பதியிலெய்தும்பரிசையுரைசெய்வாம். (1)

அன்னவேந்தர்மரபினவதரித்
திந்நிலந்தருமேன்மையன்யாவருஞ்
சொன்னசீவல்லவப்பெயர்சூடினன்
பன்னுநூன்முழுதுந்தெரிபான்மையான். (2)

மிருதிவல்லன்விளங்கியதோற்றத்தன்
குருவைவந்தனைசெய்வன்குரவன
தருளினுண்மையறிபவனீதிநூ
லொருவிலான்விறல்பூணுமொருவிலான். (3)

உலகம்யாவுமுவப்பவன்செஞ்சொலான்
பலர்மனங்கவர்பண்பினனண்பினு
னிலவுமாழமுடையனிலைமையா
னிலகுமாநகரேத்துஞ்சதுரனே. (4)

தீரன்பின்செயன்முன்சொலுஞ்சீர்த்தியான்
யாருந்தூயருந்தன்னிடத்தெய்துவோன்
சாரும்பல்லுயிர்க்கேற்பனதான்செய்வோ
னேரும்வேதவேதாங்கமுணர்ந்துளோன். (5)

மெய்யன்றிண்மைவிரதம்பிடித்துளோன்
பொய்யில்செல்வன்புகழ்குணசாத்திக
னையன்மெய்ம்மையர்வேண்டுந்தொடர்பினன்
செய்யுநல்லறம்வல்லதிறமையான். (6)

குரவர்மீதன்புகொண்டமனத்தினன்
பிரியமுள்ளான்கண்ணோட்டம்பெரிதுளான்
பொருளெலாமுடையான்புலவோரையு
மிருமுதுகுரவோரையுமேத்துவோன். (7)

வஃளியோன்பெருந்தெய்வம்வழுத்துவோ
னுள்ளதன்றிப்பிறர்மனையுள்ளிடான்
றெள்ளிதென்றுந்திருமாலடித்துணை
யள்ளுமன்புளனவ்வியமில்லனே. (8)

ஆயநீர்மையராயன்மதுரையின்
மேயநாளொருகாலமிடைந்திருள்
பாயபாதியிராவிற்பரியிடைத்
தூயசோதனைசெய்யத்துடங்கினன். (9)

உறைகழித்துவடிவாளுருவிபோர்
கறைமலர்க்கையிலேந்திக்கவசமிட்
டெறுழ்வலிக்கடுங்தரித்தேகின
னிறைதெருத்தொறுநின்றுதிரிகுவான். (10)

யாவரென்சொல்கின்றாரென்றிருசெவி
மேவவோர்ந்துவினவுவானுங்கொரு
தேவர்கோயினின்றோர்பதிகன்செலக்
காவலோனுமவன்வரல்கண்டனன். (11)

ஒருகணப்பொழுதாங்குநின்றாங்கெதிர்
வருவதியாரெங்குளாயிங்குவந்ததென்
விரவியோதெனவேந்தன்வினவலு
மருளும்வாசகமந்தணன்கேட்டனன். (12)

தலைவன்முன்சென்றுதன்மரபாதியா
நலமையாவுந்தெரியநவிற்றுவான்
குலனுங்கோசிகர்கோத்திரத்தெய்தினேன்
மலருஞ்சோமசன்மாவெனும்பேருளேன். (13)

அவந்திநின்றுமவனியிற்புண்ணிய
நவந்தருந்தீர்த்தயாத்திரைநண்ணியின்
றுவந்துவந்திம்மதுரையையுற்றனன்
பவந்தொலைந்திடவென்றிவன்பன்னவே. (14)

கேட்டறிந்தகெழுதகைவேந்தனு
மீட்டுமொன்றுரைப்பானுயர்வேதிய
வூட்டரும்புருடார்த்ததொடுக்கத்தை
யீட்டும்வண்ணமெனக்கிங்கிசைத்தியால். (15)

என்றுகூறப்பரத்தினியற்கையாய்
நன்றியாமிதியாசத்துணட்டதாய்த்
தோன்றதாமொர்சுலோகமுணர்த்துவா
னென்றுகேள்வியுாவோனுவந்தரோ. (16)

வேறு.

வருடநாள்வேண்டும்பண்டமற்றையெண்மதியிற்கொளக
விரவிடைவேண்டிற்றெல்லாமெல்லொளிப்பகலேதேர்க
நரையுறுமூப்பிற்கேற்பதிளமையினுடிச்சேர்க்க
பரகதிக்கேதுவாவதிம்மையிற்றேடற்பால. (17)

என்பதைவினவியில்லத்தெய்திபோரேட்டிற்றீட்டிப்
பொன்பொதியுதயன்றேன்றும்புலரிபிலெழுந்துகண்ட
மொன்பதையாளும்வேந்தனுறுகடனியதிமுற்றி
மன்பதைபுகழத்தாணிமண்டபத்சடைந்தானன்றே. (18)

ஒற்றராலமைச்சர்க்கூவியொல்லையின்மறைநூலெல்லாங்
கற்றறிந்தழுக்காறற்றோர்சணத்தொடும்புரோகிதத்து
நற்றொழினடாத்துஞ்செல்வநம்பியாங்காமர்நாமம்
பெற்றவற்கொணர்ந்துசெம்பொற்பீடமீதிருத்தியேத்தி. (19)

தத்துவங்கடந்தஞானத்தனிப்பொருட்காட்சிதன்னை
யுய்த்தெனக்குணர்த்துகென்னவொளிமதிமருமான்கேட்பச்
சித்தநல்லுணர்ச்சிதேருந்தேசிகன்செல்வநம்பி
வித்தகன்மனத்தினோர்ந்துவிம்மிதமடைந்துபின்னர். (20)

நூன்முறைமுழுதுந்தேர்ந்தநோன்மைசால்குணத்தின்மிக்கோர்
நான்மறையங்கம்வல்லோர்தன்னதுநாட்டில்வாழு
மேன்மையர்தனைநேர்மாண்பின்வேதியரவையினுப்பண்
வான்மதிவல்லீரீண்டுச்சொல்லுமின்வல்லைமன்னே. (21)

சாற்றுதத்துவங்களென்னைதனையுணர்ஞானமென்னை
மேற்றருவேதந்தேர்வோர்மேவியபயன்மற்றென்னை
யாற்றிமன்னுயிர்கள்யாதாற்பவப்பிணியகன்றுநீங்குந்
தேற்றுதிர்முழுதுமென்னுச்செல்வர்கோனுரைத்தல்கேளா. (22)

அவையகநிறைந்தசீலத்தாரியர்யாருந்தத்த
நவைதவிர்மதநூலுண்மைநவின்றனராங்கப்போதிற்
சுவையமிர்தெழுத்தின்மல்கித்தொடைபெறுந்தகைத்தாய்வானி
லிவையவையன்றன்றென்றுவெழுந்ததோர்தெய்வவாக்கு. (23)

சேடில்சீருடையாய்விஞ்சைக்கிழியொன்றிற்பலபொன்றூக்கி
யீடுறச்செய்தியந்தவிருந்தனத்திருத்தும்யாமே
பீடுறுகிழியும்வேதப்பெரும்பொருட்டத்துவத்தை
யூடுறவெய்தியாவனுணர்த்தினனவன்கைக்கெய்தும். (24)

அவன்மனத்திருந்துதோற்றவருளியப்பொருளையன்னோன்
கவரநாம்புரிதுமென்றுகழறியவ்வானவாணி
மவுனமாயொழிந்துநிற்பமன்னர்தம்மன்னனஃகேளா
வுவகையும்வியப்புமெய்தியொளிமுகஞ்சிறந்துதோன்ற. (25)

திருநிறைசெல்வநம்பித்தேசிகன்றன்னையன்னா
னருகுறையமைச்சரோடுநோக்கியாய்ந்தளவில்வேதப்
பொருண்முடிவனைத்துங்கண்டபுலமையோயெனதுசிந்தை
கருதுமாசங்கைபோக்கக்கடவைநீயென்னலோடும். (26)

வழுதியர்பெருமநீசொல்வண்ணமேயாவதென்று
வெழுதுதன்னிருக்கைபுக்கானெழுந்துபின்பிறருஞ்சூழ
முழுதுணர்செல்வநம்பிமொய்த்திளங்கதிர்பாப்புஞ்
செழுமணிவிமானவாழ்க்கைச்செங்கணுற்சுன்புசெய்வான். (27)

நலந்திகழ்நாமஞ்சாற்றிநறுமலர்தூற்றிவாசங்
கலந்தசிற்றுண்டியோடுமெறுசுவைகனிந்தவன்னம்
பலந்தருகனிகண்மற்றும்பயில்வுறநிவேதித்தியாணர்
மலிந்ததாம்பூலமாதிமலர்முகவாசநல்கி. (28)

உருகுமன்புள்ளந்துள்ளவுள்ளொடுபுறனுமொன்றிப்
பெருகுசொற்றுதிகள்பேசிப்பின்னேகோனமுதுசெய்த
திருநிவேதனங்களாயவோதனத்திரள்களெல்லா
மருமறைக்கேள்விசான்றவயிணவர்க்கருந்தவூட்டி. (29)

அவர்முகத்தனுச்சைவாங்கியருள்பெறப்பலகால்வேண்டி
யுவரிபோன்மேனியானையுளப்படமுணர்விற்பாவித்
திவர்வுறமூன்றுவைகலின்னணம்வழிபட்டன்பிற்
றவலருந்தலைப்பாடெய்தித்தனித்தவோர்மனத்தனுகி. (30)

வேறு.

நேயமொடரியருணெடிதுறல்கருதி
யாயிடைவைகினனவனதுகனவின்
மாயவனெளிவரும்வடிவினனுகித்
தூயவவினவெனவிவையிவைசொலுவான். (31)

முறைபடுமருமறைமுழுவதும்யாமே
மறைகளினெறியுணர்வரதனும்யாமே
பொறையுறுதருமபுராணமுமயாமே
யறைதருமனுவிதியாசமும்யாமே. (32)

கருமமுணர்த்தியகாண்டமுஞான
நிருமலவீடுணர்காண்டமுநிரலே
யருளியபூர்ப்பமும்வாமமுமாமென்
றுரிமையினுரைசெயவுலகினிலிலகும். (33)

விரிதருசாகையின்மிகுமறையானு
மரிதுணராங்கதினங்கமதானு
மருவியெம்மடியிணைவழிபடலானுந்
திரிமலமறுமதருவொளிதெரியும். (34)

ஆவதனாலெமதடியவனொருவன்
மாவிதயந்தனின்மகிழ்வுடன்யாமு
மேவினமவனதுமுன்னிலைவிளைவா
லோவறுபொருடனைநிறுவுதுமுரவோய். (35)

காரணமினியுணர்கெனவளர்கனவி
னாரணனிவைசொலநாடியசம்பற்
பூரணனுவகையொர்புணையெனவனாம்
வாரணமறிகடன்மலிகரையடைவான். (36)

ஞாயிலினிருசுடர்நடுவழிவிலக
வாயிலினிலைதொறுமணியொலிகதுவுங்
கோயிலினரசிடைகுறுகிமொழிந்தான்
றுயிலுமினியவனருளியதகவை. (37)

கண்டவனுரைசெய்தகனவையும்வினவி
மண்டலமுழுதுடைவழுதியர்பெருமான்
கொண்டதொருவகையன்மனமதுகுளிரா
விண்டனன்வரும்வகைமதிஞரைவிரைவின். (38)

மந்திரர்வருதலுமதிதெளிவுடையோ
னிந்தநலருண்மொழிதனையுமியம்பிப்
புந்தியினலமைகொள்புலவிர்கணும்மான்
முந்துறமுயல்வதுமுயலுமினிவணே. (39)

சாற்றுதல்சாற்றுகவெனுமொழிதலைமே
லேற்றனர்மதிஞருமெண்ணிலவொற்றுட்
டாற்றினர்நிச்சயமாயதொர்கருமந்
தேற்றினர்செழியனைநோக்கினர்தெளிய. (40)

வேறு.

பாகுபடும்பொழுதீரெழுகோடிபசும்பொன்விரைந்துகொணர்ந்
தாகமவேதமளந்தவரைக்கொடநாமயமானவனை
நாகணைதுஞ்சியநாரணனைச்சகநாதனையன்புடனா
வாகனமுஞ்செய்துபூசைபுரிந்தனன்மாகனகந்தனிலே, (41)

பூமகளைக்கலைநாமகளைப்புருகூதன்முதற்சுரரை
யாமிருடித்தலைவோரைவசுக்களையாதிமருத்துவரை
யேமவுருத்திரகோடியைமற்றவிராறுவிகர்த்தனரை
மாமையருச்சனைசீவலவப்பெயர்மாறணியற்றினனே. (42)

கிழித்தலரின் றுமறைப்பொருளொன் றுகிளத்துமினென் றுவல்லே
வழுத்தினனம்பொனிழுத்துமுடிந்துமனத்தின்மகிழ்ந்துடனே
யெழுத்துவரைந்துவிடுத்துலகெங்குமிருக்குமருந்தவரை
யழுத்தமடைந்தகருத்தினகந்தையழுக்கறுமந்தணரை. (43)

தத்துவவாய்மைரிறுத்துநரைப்பலதந்திரமோதுநரைச்
சித்தசமம்பெறுமுத்தமரைப்பகைசெற்றமிலாதவரை
வித்தகநான்மறைகற்றவர்தம்மைவிளித்துவிதிப்படியே
வைத்துவணங்கிமுகிழ்த்தகையாளொருவார்த்தைவிளம்புவனால். (44)

ஓதியுணர்ந்துவிழுத்தகைபெற்றவொழுக்கமுடைப்பனவீர்
நீதிமறைப்பொருளுண்மையெலாம்வலநீயிரிவ்வாய்மைதனை
யீதெனயாருமுணர்ந்திடவேசெய்திறுத்தரிதிப்பொதிபெற்
ருதியராகுமினென்றனவோரையுநோக்கியறைந்துவிடா. (45)

வேறு.

தென்னர்கோமகனித்திறமுயற்சிசெய்தொழுகு
மன்னகாலையிலணிதிகழ்கூடன்மாலழகன்
றன்னதாகியவிமானமீதுறத்தனித்திருந்து
மன்னர்மன்னவன்மனக்குறைமுடித்திடமதிப்பான். (46)

சேனையாளுடைமுதலியைத்திண்சிறைப்பறவைக்
கோனைநாடினனினைத்தலும்விரைந்தவர்குறுகிக்
கானநாண்மலர்க்கரங்குவித்தென்கொலோகருமம்
வானநாதநின்றிருவுளம்பணித்தியான்மகிழ்ந்தே. (47)

என்னுமாற்றமாங்கிருவருமியம்பலுமெழில்சேர்
பொன்னின்மார்பினனிருவருளொருவற்குப்புகல்வான்
மின்னுநாகமுநேரிடைவினதைதன்புதல்வா
மன்னுதூய்மையாய்கருமங்கள்யாவையும்வல்லாய். (48)

ஆல்விளங்கியதிருப்பதியதுகுறித்தணுகி
யேல்வைதாங்கியாங்காலிலைத்துயின்றருளெம்மைக்
கால்வணங்கியெம்மனுச்சைகைக்கொண்டுகண்டப்பான்
மேல்விரும்புவதொன்றுளதுனக்குநாம்விரிப்பாம். (49)

அன்பனெம்மிடையொருகொழுந்தோடியவகத்தான்
வன்பிலான்மனப்பொறையுளான்மறைவலானென்று
நன்பெருந்துழாய்நந்தனவனமுதற்சமைப்பான்
பொன்பொலிந்துபூமாலைகைதொடுத்தெமைப்புனைவான். (50)

எமக்குநல்லவனெமக்குரித்தாயவனெமக்குச்
சுமக்குமாதரமியற்றுவோன்றென்முனித்தகையோ
னமைக்குமானததியானமேயடைந்துளோவடியார்
தமக்குநல்லவன்பட்டர்கடம்பிரானெனன்போன். (51)

அண்டர்போற்றியவில்லிபுத்தூரரிகோயிற்
றெண்டிமைப்பெரறைசுமப்பவன்றென்முனித்தகையோன்
பண்டுரைத்தவாறெம்மையாராதனைபயில்வோன்
விண்டுசித்தனென்றியற்பெயர்புனைந்தவேதியனே. (52)

ஆயவன்றனையவனதுகனவினியனுகி
மேயவிங்குளவிருத்திகளனைத்தையுமுணர்த்திப்
பாயவிஞ்சைமாணுக்கரோடெழுந்திவண்படர
வேயெனப்பொழுதிரண்டுமூன்றெல்லையிற்கொணர்தி. (53)

துறைப்பெருங்கடல்சூழ்புவித்தலத்தின்மற்றவனே
மறைப்பெரும்பொருண்மாறனுக்குணர்த்துதற்குரியா
னிறைப்பநம்பதத்தன்புளான்றனதுமுன்னிலையாய்
முறைப்படும்படிதேற்றுவான்முன்னினேம்யாமும். (54)

ஆதிநூலெனப்புகன்றிடுமெருமறைப்பயில்வு
மோதும்வேதத்தினந்தமுமதனுரிப்பொருளு
மூதுநூன்மொழிவைதிகநடைமுறைபிறவுங்
கோதிலாதனகலியுகத்தொழிந்துகுன்றினவால். (55)

இத்தரைப்படுமென்பதையாயினோர்யாரும்
பத்தியில்லரும்படருழந்துழந்துபட்டிமைசேர்
குத்திரத்தொழிலாளருங்குணமில்புல்லோருஞ்
சுத்தமில்லரும்வேதநிந்தகருமாய்த்துவன்றி. (56)

துடங்குபாசண்டர்படிச்சனரெனுந்துறையினரு
மடங்குமோர்நிலையில்லரும்பற்பல்பாடகரு
நடுங்கவேதியர்தங்களைநவையுரைப்பவருங்
கடுங்கணாளருந்தமதிச்சையோருங்காதகரும். (57)

சீலமில்லரும்வணங்கிடாத்தீயருமகந்தை
மேலிடுஞ்செபலாளரும்வேதியராயுஞ்
சாலவேகுறுக்கிட்டபுண்டரந்தரித்தோருங்
காலமோர்கிலாக்கருமமீமாங்கியத்தவரும். (58)

பிரமபாகையிலழுந்திடாமனத்தரும்பிறக்கு
முருவம்யானெனுமகத்தருமுணர்வுகுன்றினரும்
பரவுமெம்மிடைப்பராமுகரானபாதகருந்
தரணியெங்கணுந்தழைத்ததாலிறந்தனதவங்கள். (59)

அறந்தெரிந்திடாரிவர்தமையடியொடுமொழித்துச்
சிறந்ததென்னவன்பரம்பொருளுண்மையேதேற
நிறைந்தநம்மடித்தொண்டனானீணிலத்தியார்க்கு
மறைந்திடாப்பொருள்காட்டுதல்வருபொருட்டாக. (60)

நாட்டுதாமதச்சுருதிவாக்கியத்தினானடந்து
கூட்டுமோகமேற்கொண்டெமக்கயலராங்குழுவை
யோட்டிவென்றிடவின்றுநீவிரைந்தெமதுரையைக்
கேட்டன்னானைமுற்கொணர்திபோய்க்கிளர்சிறைப்பறவாய். (61)

வேறு.

என்றிவையனைத்துங்கூறியீறிலாவொருவனேவ
நன்றெனப்பலகாலேத்திநாகர்தங்குலத்தையெல்லாம்
வென்றவன்விண்ணிற்பாய்ந்துவிரைசெலுங்கடுங்காற்றென்னத்
தென்றிசையிலங்கைத்தூதுசென்றவனென்னச்சென்றான். (62)

புதுவையம்பதியைநண்ணிப்புண்ணியங்கிளைத்தாலன்ன
முதுவடதருவினீழன்மூலவாலயத்திற்பண்டே
பதுமமாமுந்திபூத்தோன்பாற்கடற்பள்ளிகொள்ளு
மதுகைசேர்காட்சிநோக்கிவணங்கியஞ்சலித்தான்மன்னோ. (63)

வடவிலைத்துயிலுமாயன்மகிழ்ந்தருளனுச்சைபெற்று
விடைகொளும்விகங்கனுங்கண்மேவியவிண்டுசித்த
னடைதருங்கனவினண்ணியணிதிகழ்கூடற்கோயி
லுடையவனருளிற்றெல்லாமுள்படக்காட்டினானே. (64)

உளமுறக்கனவிற்கண்டவுவகையேயுருவமாக
வளவிலாநந்தமெய்தியஞ்சலித்துரோமப்பொம்மற்
புளகமங்குரிப்பவேத்திப்புலரியிலெழுந்துகண்ட
வளனெலாந்தனதுகற்பின்மாதருக்குணர்த்தியப்பால். (65)

ஆலிலைத்துயிலுமண்ணலருமறையளைந்தசெம்பொற்
காலிணைசென்னிசூடிக்கைதொழுதிறைஞ்சியன்னான்
கோலியவருளினாணைகொண்டுபொற்கோயினீத்துப்
பாலினிற்றொடர்ந்துசெல்லுமாணவர்பாடிச்சூழ. (66)

நத்தணிதடக்கைப்புத்தூர்நம்பிதாணம்புநம்பி
யத்தகையவனுஞ்செல்லுமளவையிற்கூடனின்று
பத்திமைபழுத்தசிந்தைப்பனவனுஞ்செல்வநம்பி
வைத்தபல்வளத்தினேடுமெதிர்கொளவழிக்கொண்டானே. (67)

விழியுறவெதிர்ந்துசேணின்றூர்திவிட்டிழிந்துவென்றி
மொழியுமாசிடையான்சாற்றுமுகமனுன்முகிழ்த்தகையான்
ளெருழுதிருகாலிற்பல்கால்வீழ்குவான்றுதித்தவாயான்
வழிபடன்முனியானுகிமாற்றமொன்றுரைக்கலுற்ருன். (68)

மேற்படுகுணத்தின்மிக்கோய்விண்டுவைத்தாங்குஞ்சிந்தை
நூற்பயின்மார்பரேநேரோன்மைசான்மதுரைதன்னின்
மாற்படர்தோற்றந்தன்னைமன்னுசீவல்லதேவற்
கேற்புறவிதிப்பானின்னேயெழுந்தருள்வல்லையென்ருன். (69)

இன்னணஞ்செல்வநம்பிவேண்டுகொண்டிசைத்தல்கேளா
வன்னதேயாகவென்னுவவனெடுமெழுந்துவென்றிச்
சின்னமுஞ்சங்குமார்ப்பத்தெய்வநல்லூர்தியேறிப்
பன்னியுந்தானுமாகப்பட்டர்கோன்மதுரைபுக்கான். (70)

மூன்றாவது: பட்டாசிரியர் மதுரைகாண்படலம் முற்றும்.

ஆகக்கவி—698.

நான்காவது:

மெய்ப்பொருள்கூறிப் பொற்கிழிபெற்றபடலம்.

———(*)●(*)———

மட்டலர்ந்தபூந்துளவினுனுவணர்கோன்வழியாற்
பட்டர்கோனையீண்டழைத்தமைபகர்ந்துமற்றவனே
விட்டிலங்குவேல்வழுதிமுன்மறைப்பொருள்விளக்கிக்
கட்டுமொண்பொருட்கிழிபெறல்கழறுவாமிப்பால். (1)

அக்கரத்திலெட்டுடையவனடற்கரத்தெழுந்து
புக்கரத்தவாட்காலநேமியைப்புவிப்படுத்துச்
செக்கரத்திருமுக்குளநிறைந்திடச்செலுத்துஞ்
சக்கரத்தினையொத்துமேக்கிழிந்தனன்றபனன். (2)

வெய்யவன்கடற்குளித்தலுமீக்கொளுமாலை
மையபுல்லிருண்மாறனுட்கிடைசொலமாட்டாப்
பொய்யநூற்புறத்தவர்கடம்மனமெனப்புழுங்கிக்
கையிறந்தவருரையெனமருட்சிகாட்டினவால். (3)

விண்டுசித்தனூர்வந்தனரெனப்புகழ்விளம்பிக்
கண்டுகைத்தலங்கூப்பிமைக்கண்கணீர்வடிக்குந்
தொண்டர்பத்திபோற்றும்பிகள்புலம்பிடக்குவியு
முண்டகத்தயற்றடங்கழுநீர்முகைவிரிந்த. (4)

உடைந்ததானவர்குலமெனவெவ்விருளொதுங்க
வடைந்ததேவர்தங்குழுவெனவந்நிலாத்தோன்றக்
குடைந்தபாற்கடற்குமிழெனவுடுத்திரள்குழுமக்
கடைந்தெடுத்ததெள்ளமுதெனக்கலைமதியுதித்தான். (5)

தரளமீன்றுதன்புடைபரப்பியசலஞ்சலம்போற்
றிரளசேகணத்தொடுமதியுதித்தலுஞ்செழியன்
கரளவாள்விழிமடந்தையரிரட்டும்வெண்கவரி
புரளவீற்றிருந்தாடலிற்பொழுதுபோக்கினனால். (6)

அரம்பையன்னவராடலுட்டிளைத்தமிழ்தூறி
நிரம்புகீதமுண்டாங்கவர்போகமுநீந்தி
விரும்புசிந்தையன்வெண்ணிலாநித்திலமாலை
வரம்பயின்றலர்மடந்தைபோன்மார்பிடைத்தூங்க. (7)

வாலிதாகியநுண்டுகின்மருங்குடீஇப்பொற்ப
மேலில்வானினின்றுகுத்தபூந்தாதுமெய்ம்மறைப்பப்
பாவிரண்டினுந்தீபிகைமணிச்சுடர்பரப்ப
வேலைநீர்க்குடங்கண்ணடிவிசைப்பொறியேந்த. (8)

சித்திரப்படாநிரைத்துமென்கலவைசேற்றிக்
கொத்துமென்மலர்பரப்புமெல்லமளிமேற்குமரித்
தத்தைமென்சொலார்தட்டுறுகுறங்கினினிறங்கூர்
மைத்தவான்புயல்வண்ணனிற்றனித்துயில்வளர்ந்தான். (9)

தன்னைநேரிலாத்தன்குலத்திறைமகன்றனக்கு
நன்னலத்துயில்கொடுத்தனனளிர்மதிக்கடவுள்
பின்னைநானதுபார்ப்பலென்றிரவிபேர்ந்திடுமுன்
கன்னலைந்தெனநாணினன்போற்கடிதெழுந்தான். (10)

வேறு.

இதுநிகழ்பின்விண்டுசித்தன்புலரிதன்னி
 லியன்றநியதிகண்முடித்துவிமலஞ்சேர்ந்த
புதுமுகுர்த்தநல்லோரைநன்னாள்வாய்ப்பப்
 புரவலனைக்காண்குதுமென்றெழுந்துபோந்தா
னதுபொழுதிற்பரியாளர்பலர்முன்செல்ல
 வமைச்சர்குழாந்தனைச்சூழவெழுதாக்கேள்வி
மூதுமறையோராசிடைச்சொன்முழங்காநிற்ப
 முன்னவனைத்தென்னவனுமெதிர்கொண்டானே. (11)

திருமுன்னேவீழ்ந்துபணிந்தடியேன்பொல்லாச்
 சிறுகுடிலுக்கெழுந்தருள்கவெனக்கொண்டெய்திக்
குருமன்னுமாதனமேமுதலாயுள்ள
 குளிர்முகமன்பற்பலவுங்கொடுத்துப்போற்றித்
தருமன்னையனையாயிவ்வுலகுக்செல்லாந்
 தாயைமகவெனப்படைக்குந்தந்தாய்நந்தா
வொருமுன்னைப்பழம்பொருளைத்தமியன்றேற
 வுரைத்தியென்றான்றருமமோருருக்கொண்டன்னான். (12)

விரிமலர்த்தார்வேம்பனிவைகூறக்கேட்டு
 விண்டுசித்தனெனுமுனிவன்வினைதையீன்ற
பெரியதிருவடியையுஞ்சநதங்கட்கீசன்
 பிரபுவெனுந்தேவனையுமிதயத்தெண்ணிக்
கரியமுகில்பெருவரையின்மழைசேர்ந்தென்னக்
 கவின்பெறுமட்டாங்கபணிக்கோயின்மேய
வரிதனையும்பெரிதுநினைந்திருந்தானிப்பா
 லாரியனுஞ்செல்வநம்பிக்சரையன்சொல்வான். (13)

வந்தடைந்தபட்டர்பிரானெனக்குத்தேற்றம்
 வகுத்துரைக்கவல்லான்கொன்மாட்டான்கொல்லோ
சிந்தைதெளிந்திலனச்சம்பெரிதுங்கொண்டேன்
 செப்புவதென்னெனலோடுந்தென்னரேறே
நந்தமதுசங்கையிவர்தாமேதீர்ப்பா
 னண்ணினரிதற்கையமில்லையென்றென்
புந்திதனிலுறுதியடைந்திருக்கேன்வாய்மை
 புகல்கின்றேனிகழாதிபுகழற்பாலை. (14)

கண்டுனக்குமுன்னுரைத்தகனவின்வண்ணங்
கடனறிகாட்சியினுணரநிகழுங்கண்டாய்
விண்டுசித்தப்பெருமானாருளாலென்றே
விளம்புசெல்வநம்பியுரையுளங்கொள்வேந்தன்
மண்டலத்தில்வேறிருப்பப்புறநாட்டுள்ள
மறையவரைத்துறைபலவுங்கரைகண்டோரைக்
கொண்டமைச்சர்புகுவித்தார்புகுந்தோர்யாருங்
குரைகடலுட்புயலுமெனக்குழீஇயினாரே. (15)

காணாதங்காபிலமாந்திறத்தோர்யோகர்
சரூதுபாதஞ்சலியராயினோர்கள்
பூணாதவறம்புகலுநியாயநூலோர்
புத்தரொடுமொருகதர்சாருவாகர்
கோணாதபாசுபதர்காபாலத்தோர்
குண்டரெனுஞ்சமணர்மற்றுங்கூறுபாடாய்
நாணாதபுறமதத்தோர்பலருமீண்டி
நாட்டுதத்தஞ்சமயநிலைநவின்றுபின்னர். (16)

வேறு.

தங்கள்சித்தாந்தமின்னதன்மையென்றேதுக்காட்டி
யங்கதையேட்டிற்றீட்டியமரர்களதிட்டானிப்பத்
திங்கடன்மருமான்றாக்குந்தெய்வவான்கிழிமேலுய்த்தார்
புங்கவரதன்மேனின்றவ்வேடெலாம்போக்கிநீத்தார். (17)

விவிதமாந்தருக்கள்கானில்வேனிலம்பருவமெய்தத்
தவிர்தலையொழிந்துகுத்தசருகுபோலருகுவீழ்ந்து
புவிதலைப்படுமேடெல்லாநோக்கியப்புலமைமாக்கள்
கவிதலையடைந்துநாணிக்கலங்கினார்நிலங்கள்சூன்றார். (18)

தன்னவைகாட்டியின்னதகையராய்மூங்கைபோன்று
மன்னவையிருக்கலாற்றார்மானமேற்படமேனோக்கி
யன்னவைநிகழ்ந்தவெல்லையருமறைப்பொருளீதென்னாப்
பொன்னவைதன்னையீன்றபுண்ணியன்புகலலுற்றான். (19)

நாரணன்பரமேயென்றுநாரணன்பிரமமாய
பூரணந்தானேயென்றுமவனலாற்பொருளின்றென்றுங்
காரணம்பெறுநியாயமனுமுதற்கலைகளெல்லாம்
பாரணங்குடையசெல்வன்பான்மையேநிகழ்த்துமன்றே. (20)

குறைவின்றிநிறைவாய்நிற்குங்கொள்கையால்விண்டுவென்று
பொறையொன்றுமிதியாசங்கள்புராணங்கண்முனிசாத்தீக
ரறைகின்றதொன்றேமற்றுங்கடைப்பிடித்தாற்றுநின்ற
மறையென்பதனைத்துமன்னான்வடிவன்றியுலகின்றென்னும். (21)

யான்மறையனைத்துங்காணநின்றுளேன்யானிவ்வையந்
தான்முழுதுடையேனென்னைச்சார்ந்தவிச்சராசரங்க
ணூன்மணிக்கொத்ததென்னநுடங்குமென்றிறைவன்றானே
மேன்மொழிந்துள்ளபாரதாதிகண்மெய்யேதேற்றும். (22)

இறைவனைப்பூசைசெய்யுமியற்கைபூருவகாண்டத்தின்
முறைபடத்தெரிக்குமிப்பான்மொழிந்திடும்பிரமகாண்டத்
தறைவருங்குணத்திற்றேற்றமங்கங்களனைத்துங்காட்டு
நிறைபொருளொன்றேயென்னாநெஞ்சகத்தோர்ந்துதேர்ந்தே. (23)

பாசுரமிதனைத்தாலபத்திரத்தெழுதிப்புத்தூர்ப்
பூசுரனெடுத்தானன்னவாவணம்புறநூலோரை
மாசறத்துணிப்பான்சென்றவாளெனப்பிறங்கியோடித்
தேசுறநிறுவும்விஞ்சைக்கிழித்தலைச்சிறந்ததன்றே. (24)

அத்தலையமர்ந்ததேவராவணமதுகைக்கொண்டு
மொய்த்தனர்மகிழ்ச்சிதாங்கமுனிவரர்குழாங்களோடுஞ்
சத்தியவாணியென்னுஞ்சாரதாதேவிதோன்றி
வித்தகக்கிழியைப்பட்டர்வேந்தன்கைக்களித்தாளன்றே. (25)

ஆயிடையமரர்யாருமணிநகைமுகத்தராகிச்
சேயிடைகுழீக்கொண்டார்த்துத்தெய்வமந்தாரப்பொற்பூத்
தூவினர்மழைபோல்வானதுந்துமிதுவைத்தார்துள்ளி
மாயிருந்திசையும்பாருமலிந்ததுதிமிலப்பம்பல். (26)

தாங்கியகுலிசனாதித்தலைவர்தத்துவத்தினையு
நீங்கினர்மகிழ்ந்தாராங்கணிகழ்ந்தகாரணத்தைநோக்கி
வீங்கியபுயத்தன்றன்னைவிழுங்குமானந்தனூறற்
றேங்கியகளியனாகிச்செழியர்கோனிதனைச்செய்வான், (27)

மூர்இருந்தருளும்பட்டர்முதல்வனாமுனிப்பிரானை
மந்திரக்கிழவரோடுமரபுளிவழாதுபூசித்
திந்திரவளத்தின்மேயவெழிலரியணைமீதேற்றிச்
சந்திரன்றபனன்போலுந்தகைமணிப்பூண்கள்பூட்டி. (28)

தோமறுவிலையிற்றீர்ந்துதோய்த்தநுண்டானைசாத்திச்
சாமரைவிசிறிவீசத்தவளவான்குடைநிழற்றக்
காமருதனதகோயிற்கந்தவாரஞ்சேர்கற்பின்
றேமருகுழலார்யாருஞ்சேவகஞ்செய்துசூழ. (29)

பல்லியம்பெரிதுமார்ப்பப்பரிசனர்பரவிமொய்ப்ப
வெல்லுறுதடக்கையேந்தல்வேழத்தின்பிடரிலேற்றி
மல்லுயர்திணிதோள்வென்றிமன்னவனடந்துபின்னே
செல்லுவதாகிக்கூடனகர்வலஞ்செய்வித்தானே. (30)

வேறு.

ஆனபொழுதிலெட்டுறுப்பினணிவிமானத்திடைநின்றும்
வானமளந்தபெருஞ்சீர்த்திமதுசூதனனிம்மாநிலத்தில்
யானமென்னுஞ்சிறைப்பறவைக்கிறைவன்பெருந்தோண்மீதிவர்ந்து
சேனைமுதல்வன்முதற்கணங்கடேவர்பிறருந்திரண்டேத்த. (31)

தன்போலுருவுஞ்சின்னமும்பெற்றழியாதிருக்குந்தலைவரொடு
நன்பேரன்புக்கன்பினனாநால்வேதங்களேத்தெடுப்ப
மின்போழ்விசும்பின்வழிதோன்றிவிளங்குங்காட்சியெதிர்நோக்கி
யன்பூடுருவும்பட்டர்பிராற்கணியனாகியடைந்தனனால். (32)

பைம்பொன்மேனிச்செய்யமுகப்பச்சைச்சிறகர்க்கலுழபிரான்
செம்பொன்மலர்த்தாள்கரத்தேந்தச்சிந்தைக்கடங்காவொளிதுளும்பத்
தும்பைமோலிச்சுரர்நெருங்கச்சூரிசனங்கடொழுதேத்த
நம்பிகூடலழகனங்குநண்ணும்வரவையென்னுரைக்கேன். (33)

ஆரமிலகவங்கதத்தோடம்பொற்கடகமின்பரப்பப்
பாரமணியின்மதாணிமின்னப்பதினாயிரத்துப்பதங்கர்திரண்
டீரமதியோடுதித்ததுபோலெறிக்குஞ்சுடர்கான்மணிமகுடந்
தாரிணைகைப்பத்திருமருவுந்தடமார்பகத்தினிடைதுலங்க. (34)

ஏந்தன்மணியாங்கவுத்துவத்தினிலங்குஞ்சோதிநிலந்துலக்கக்
காந்துவெயிற்பீதாம்பரத்தின்கற்றையொளிரவுத்தரியஞ்
சார்ந்தமணிந்தமணிமார்பினுபவீதத்தினொடுதயுங்கப்
பூந்தண்டுளவப்பருமாலைபுயத்திற்பொலிந்துதிகழ்ந்தசைய. (35)

எழுதற்கரியவடிவழகனீர்ந்தண்கமலத்தடங்கண்ணான்
முழுதிப்புவனமனைத்தினுக்குமொருநாயகமாந்தனிமுதல்வன்
பொழுதிற்சிறந்தவப்போழ்திற்போந்தானெனலும்வானோக்கித்
தொழுதற்புதமுங்களியுமெய்தித்துளங்காவிடயர்தடுமாற. (36)

திருமால்கருணைப்பேரழகாந்தெய்வத்திரைப்பாற்கடன்மூழ்கி
வருமாதரத்தாற்பேரன்புவளரத்தளராமொழிவிம்மக்
கருமாணிக்கச்செழுந்திரளேகண்ணேமணியேகற்பகமே
பெருமாவென்றுபுதுவைநகர்ப்பெம்மான்வாழிவாழ்த்துகின்றான். (37)

மல்லாண்டிலங்குமணத்திண்டோண்மாயாதூயபரமேட்டி
தொல்லாண்டிருந்தகுடியடியோமுன்னேடியாமுந்தொழுதொழும்பு
மெல்லாந்தருமுன்றிருவடிகளிரண்டும்பண்டையெமதுணர்வும்
பல்லாண்டேழிபல்லாண்டுபலகானூறுயிரத்தாண்டே. (38)

உருளுஞ்சகடமுடைந்தோடவுதைத்தவலர்த்தாள்பல்லாண்டுன்
மருமமாடத்துறைகின்றமங்கைதானும்பல்லாண்டு
பருதிகோடியெனப்பிறங்கும்படைச்சக்கரமும்பல்லாண்டு
தருணமதியமயுதநிகர்சங்கத்திறையும்பல்லாண்டே. (39)

பூணும்பணியான்சிலைமுறித்தபுனிதக்கேண்மைபல்லாண்டு
தாணின்றுதைப்பத்தலைகுனிக்குஞ்சார்ங்கவில்லும்பல்லாண்டு
காணுங்கனகன்மார்பிடந்தகூடும்போர்த்திறமும்பல்லாண்டு
வாணன்புயமாயிரமறுத்தமறச்சேவகமும்பல்லாண்டே. (40)

ஆயாவென்றிச்சமர்வீரமனைத்தும்பலகாற்பல்லாண்டென்
றேயாச்சீர்த்திபிறபலவுமுணர்விற்பெரியோன்வாழ்த்துதலுஞ்
சேயாரிடத்தினெதிர்தோன்றுந்தேவர்தேவன்வாய்மலர்ந்து
தூயார்தம்மிற்றூயவனும்பட்டர்கோனுக்கிவைசொல்வான். (41)

யாதுவேண்டிற்றுனக்கெம்பால்யாமுமதனைத்தரவந்தே
மோதுகெனவம்மொழிகேட்டோனுள்ளக்கமலம்வாய்மலர்ந்து
காதல்பெருகிக்கரைந்துருகக்கனியுமன்புமீதூர
வேதமுறைத்தபெருமானும்விளம்பிபிதனைவேண்டுமால். (42)

வேறு.

அண்ணலேயமரர்கட்காதிநாதனே
கண்ணனேயெம்பெருங்கடவுளேயுனை
யெண்ணியானிங்ஙனம்வழிபட்டேத்திட
நண்ணுவாயுலகருணடாத்தநாடொறும். (43)

என்றவனுரைத்தசொல்வினவியெங்குமாய்
நின்றவன்மறுமொழியிதுநிகழ்த்துவான்
மன்றவன்புரிந்தசீவல்லவன்சவை
முன்றில்வாயணிபெறமுயங்குமிவ்விடை, (44)

உளங்கவர்மல்லமண்டபமென்றுள்ளதில்
விளங்குறசின்னெடுமென்றுமேவுதும்
வளங்கொடுமகிழ்ந்தெனுவழங்கிமாசிலாக்
களங்கனிவண்ணனுங்கரந்துபோயினுன். (45)

மருத்துவரிந்திரன்வானுளோர்தொழத்
திருத்தகுமார்பினுன்சேணிற்சென்றபின்
பருத்ததோட்செழியனும்பட்டர்நாதனை
யருத்தியின்மகிழ்ந்துதன்னகங்கொண்டேகனுன். (46)

அன்புறுபாத்தியமாசனுதியாய்
மன்புரியருச்சனைமரபினுற்றியே
தன்புடைமனைவியுந்தானும்வந்தியாப்
பொன்புனையாடைபூண்புனைதல்செய்தரோ. (47)

கரும்பினிற்கோதுண்டுகனியிற்றேலுண்டு
விரும்பினர்க்கமிர்திலோர்வெறுப்புண்டாகுமோ
தரும்பயனுணர்ந்திடாதடியன்முற்சொலும்
பெரும்பிழைபொறுத்தியென்றிரந்துபேசியே. (48)

மட்டலர்ச்சேவடிவணங்கிச்சென்னியாற்
றொட்டகம்பிரிவதற்கஞ்சிச்சூழ்ந்திட
வொட்டகத்தெடுத்துயர்தனங்கொண்டேர்செல
விட்டனன்பட்டர்கோன்றன்னைவேந்தனே. (49)

நல்விலக்கணத்தின்மாணுக்கர்தம்மொடும்
பல்வியத்தொலியொடும்பாடற்பண்ணெடுந்
தொல்விபத்தூர்திமுற்சுரர்கள்போற்றிடும்
வில்லிபுத்தூரிடைமேவிவைகினுன். (50)

செந்திருமார்பினுன்செம்பொற்கோயில்கண்
முந்திருந்ததிற்புதிதாக்கிமூதுணர்
புந்தியான்றிருச்சயிங்கரியப்போழ்,தினு
மந்தியும்பகலுஞ்சென்றூர்வங்கூர்ந்தனன், (51)

என்றிவைநாரதனிசைத்தவிக்கதை
தொன்றதாய்நிகழுமுன்சொல்லிவைத்தன
னன்றறிந்திகபரநலனுணர்ந்திட
நின்னுமாதவமெனுநிதிபடைத்துளீர், (52)

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1923-ம்ஆ பிப்ரவரி மாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1923 பிப்ரவரி			வரவு 1922 பிப்ரவரி			விவரம்	செலவு 1923 பிப்ரவரி			செலவு 1922 பிப்ரவரி		
I GENERAL SECTION:							I GENERAL SECTION:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	80	...	...				(1) ESTABLISHMENT:—						
(2) சங்கப் பரீக்ஷைக்கட்டணத்தொகை வரவு ...	26	4	...				(a) மானேஜ்மெண்டு ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாகியது ...	131	...	...			
(3) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள் விற்றவகையில் வரவு. ...	119	7	6				(b) கலாசாலைஉபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது	107	...	...			
(4) Miscellaneous வரவு...	...	4	3				(c) கலாசாலைமாணவர்கட்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது ...	40	8	2			
மொத்தம் ...	225	15	9	179	15	3	(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது	45	...	...			

II Editorial Section:						
(1) சங்கத்தின் அங்கத்தினர் களிடமிருந்து சந்தாவரவு	47	12	...			
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக் குச் சந்தாவரவு ...	95	6	...			
(3) விளம்பர சார்ஜ் வரவு ...	1	8	...			
(4) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	24	9	6			
மொத்தம் ...	169	3	6	370	8	9

(2) Stationery, contingencies வகையிற்செலவு ..	9	2	...			
(3) புத்தகம்வாங்கியவகையிலும் பத்திரிகைக்குச் சந்தா செலுத்திய வகையிலும்செலவு ..	4	2	...			
(4) தபால், தந்திவகையிற் செலவு	20	3	6			
(5) முனிசிபாலிடிக்கு வரிவகையிற் செல்லாக்கியது ..	49	8	...			
(6) சங்கம் சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலிபைண்டிங் கூலிவகையிற் செலவு ...	35	4	...			
(7) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச்செலவு ...	91	10	3			
மொத்தம் ..	533	5	11	624	4	3
II Editorial Section:						
(1) சிப்பந்திகட்குச்சம்பளம்செல்லாக்கியது ..	35	...	...			
(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம் அச்சுக்கூலி வகையிற் செலவு ...	64	8	...			

III **Press Section:**						
(a) Printing Office:						
(1) சங்கம் அச்சாபீசில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	176	8	...			
(2) அடிவேலைகட்காகக் காகிதக்கிரயம் வரவு ...	13	12	...			
(b) Binding Office:						
சங்கம் பைண்டிங் ஆபீசில் நடந்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு ...	24	5	...			
மொத்தம் ...	214	9	...	411	10	...

(3) தபால், தந்திவகையிற்செலவு	18	2	6			
மொத்தம் ...	117	10	6	56	12	...
III Press Section:						
(a) Printing Office:						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	158	12	4			
(2) Stationery Contingencies வகையிற் செலவு ...	60	3	6			
(3) முனிசிபாலிடிக்கு வரிவகையிற் செல்லாக்கியது ...	9	...	...			
(b) Binding Office:						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	25	11	6			
(2) Stationery Contingencies வகையிற் செலவு ...	24	9	5			
மொத்தம் ...	278	4	9	346	...	6

ஆகமொத்தம் வரவு ரூ ...	609	12	3	962	2	...	ஆக மொத்தம் செலவு ரூ ...	929	5	2	1027	...	9
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ ...	1463	...	2	482	15	5	மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ...	* 1143	7	3	418	...	8
ஆகமொத்தம் ரூ ...	2072	12	5	1445	1	5	ஆகமொத்தம் ரூ ...	2072	12	5	1445	1	5

*By C Pass Book 850—0—0
Cash on hand 293—7—3

1143—7—3

Audited and found correct,

V. S. RAMASWAMI,
AUDITOR,
22—4—23.

LAKSHMINARAYANAN,
Manager,
MADURA TAMIL SANGAM.
5—3—1923.

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1923-ம்௵ மார்ச்சுமாத வரவு செலவு கணக்கு.

வரவு

விவரம்	1923 மார்ச்சு			1922 மார்ச்சு		
I GENERAL SECTION:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	113	...	...			
(2) சங்கப் பரீக்ஷைக்கட்டணத் தொகை வரவு ...	...	4	...			
(3) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	71	4	6			
(4) Miscellaneousவரவு ...	3	14	6			
மொத்தம் ரூ ...	188	7	...	818	8	9

செலவு

விவரம்	1923 மார்ச்சு			1922 மார்ச்சு		
I GENERAL SECTION:						
(1) ESTABLISHMENT:—						
(a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	129	8	...			
(b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம்செல்லாக்கியது	107	...	...			
(c) கலாசாலைமாணவர்கட்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது ...	126	6	3			
(d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	45	...	...			

	Rs.	A.	P.	Rs.	A.	P.
II EDITORIAL SECTION:						
(1) செந்தமிழ்ப்பத்திரிகைக்குச் சந்தா வரவு ...	22	12	...			
(2) செந்தமிழ்ப் பழையதொகுதிகள் விற்ற வகையில் வரவு	16	15	...			
மொத்தம் ரூ ...	39	11	...	75	5	...
III PRESS SECTION:						
(a) Printing Office						
(1) சங்கம் அச்சாபீஸில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	208	13	...			

	Rs.	A.	P.	Rs.	A.	P.
(2) Stationery, contingencies வகையிற் செலவு ...	4	15	11			
(3) பத்திரிகைக்குச் சந்தா செல்லாச்சியது ...	2	12	...			
(4) தபால், தந்தி வகையிற் செலவு ...	13	9	6			
(5) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலி வகையிற் செலவு ...	54	12	...			
(6) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச்செலவு ...	54	12	...			
மொத்தம் ரூ	538	11	8	527	8	11
II EDITORIAL SECTION:						
(1) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப் புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம், அச்சுக்கூலி வகையிற் செலவு. ...	275	4	...			
(2) தபால், தந்திவகையிற்செலவு	13	7	...			
மொத்தம் ரூ ...	288	11	...	154	9	6

(2) ஷை வேலைகட்காகக் காகிதக் கிரயம் வரவு ...	28	9	...			
(b) Binding Office						
சகசம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு...	35	15	...			
மொத்தம் ரூ ...	278	5	...	348	12	...

III Press Section:

(a) Printing Office.						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	159	8	5			
(2) அச்சாபீஸ் உபயோகத்திற்கு Types வகையரா அச்சுவேலைகட்குரியசாமான்கள் வாங்கியவகையிற் செலவு ...	21	15	...			
(3) Stationery Contingencies வகையிற் செலவு ...	57	15	5			
(b) Binding Office						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	31	1	1			
(2) Stationery Contingencies வகையிற்செலவு ...	34	14	2			
மொத்தம் ரு. ...	305	6	1	443	6	9

ஆகமொத்தம் வரவு ரூ. ...	501	7	...	1242	9	9	ஆக மொத்தம் செலவு ரூ.	1132	12	9	1125	9	2
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ. ...	1143	7	3	418	...	8	மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ...	* 512	1	6	535	1	3
ஆகமொத்தம் ரூ. ...	1644	14	3	1660	10	5	ஆக மொத்தம் ரூ. ...	1644	14	3	1660	10	5

*By C Pass Bk. Rs. 350-0-0
Cash on hand Rs. 162-1-6

512-1-6

Audited and found correct.

V. S. RAMASWAMI,
AUDITOR.
22—4—23.

LAKSHMINARAYANAN,
Manager.
MADURA TAMIL SANGAM.
5—4—1923